ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44] இரக்தாக்ஷி ஆண்டு தைத்திங்கள் 10-2-85 [இதழ்

மகாசிவராத்திரி நாள்: 17 — 2 — 85 ஞாயிறு



ஸ்ரீ சந்திரசேகரர்

சிவராத்திரியை முன்னிட்டுக் காட்சி அருளுகிறார்

தருமையாதினக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

கடியார் பொழிற்செறி ஆரூரன்
ஞானப்ர காசன்முத்திக்
கொடிஆள் பவன் அன்பர்க்
[கின்பே
யளிப்பவன் கூறவொண்ணுப்
படியான ஆனந்த மேயுரு
வானவன் பாரில்நம்பா
அடியா ரினங்கண் டறியா
தவன்என்னை ஆண்டவனே.

— ஞானப்பிரகாசமாலை 5

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி அருணைவடிவேல்முதலியார்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 || 10–2–85 || இதழ் 3

உட்பொருள்

எண்		பக்கம்
1	பிரார்த்தனைப் பலன்	125
2	தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	129
3	மாண்புமிகு க. ராசாராம் அவர்கள் வழங்கிய பேருரை ...	136
4	" பான்மையுள்ள மந்திரம் " ...	140
5	அபிராமி அந்தாதி ...	141
6	திருவருட்பாத்திரட்டு...	146
7	கதிரவன் குடும்பம் ...	151
8	சிவபூசையின் சிறப்பு	154
9	பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை ...	158
10	கடிதங்கள்	164, 180 iv
11	குலச்சிறை நாயனர் ...	165
12	செய்திகள் ...	173
13	எதிர்காலம் ...	178
14	இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி; பாடம் - 1.	181

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ.	12
ஆண்டுச் சந்தா சிலோன்	25
ஆண்டுச் சந்தா வெளிநாடு	35
ஆயுள் சந்தா உள்நாடு ரூ.	125
ஆயுள் சந்தா வெளிநாடு	350

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 44 | இரக்தாக்ஷி – தை – 10–2–85 | இதழ் 3

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

பிரார்த்தனைப் பலன்

முதல்வர் முதல்வராகவே மீண்டார்:

பொன்மனச்செம்மல், புரட்சித்தலைவர், மக்கள் திலகம் எனப் பொதுமக்களால் போற்றப்படுபவர் நம் தமிழகமுதல்வர் எம். ஜி. ஆர். கடந்த அக்டோபரில் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். முதலில் அவருக்கு ஆஸ்த்மா நோய் என்று அறிவிக்கப்பட்டது. இரண்டாவதாக சிறுநீரகக் கோளாறு எனச் செப்பப்பட்டது. மூன்ருவதாக' பக்கவாத நோய் என்று பார்த்த மருத்துவர்கள் பகர்ந்தனர்' நான்காவதாக இரத்தம் உறைந்து மூளைக்கட்டி ஏற்பட்டுளது' என மொழிந்தனர். அவர் தப்புவது அரிது எனப்பேசிவந்தனர். டாக்டர்களும் அரிதின் முயன்று அவரைக் கவனித்தனரே அன்றி அவர்களும் நம்பிக்கை கொண்டாரிலர். அந்நிலையில் எம். ஜி. ஆர். அவர்களை அமெரிக்காவிற்குக் கொண்டு சென்றனர். அவர் தம் சகோதரர் மகள் திருமதி லீலாவதியின் ஒரு சிறுநீரகத்தைப் பெயர்த்தெடுத்து அறுவை சிகிச்சை மூலம் அன்னருக்குப் பொருத்தப்பட்டது. இரத்தக் கட்டி கரைக்கப் பட்டது. பக்கவாதநோய் படிப்படியாகத் தீர்க்கப்பட்டது.

ஆஸ்த்துமா அடங்கியது. இதற்கிடையே வரலாறு காணாத தேர்தலும் நடைபெற்று அளப்பரிய வெற்றியும் கண்டார். முதல்வராகவே சென்றவர் முதல்வராகவே தாயகம் திரும்பினர். மேற்சொன்ன நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தார் என்பதற்கான அடிச்சுவடே தெரியாத அளவுக்கு ஆரோக்கியமுற்று மீண்டார். இலட்சோப லட்சம் மக்கள் கூடி இருந்து இதயபூர்வமான அன்புசெலுத்திவரவேற்பு அளித்தனர்.

மக்கள்தம் மகத்தான பிரார்த்தனை :

"சிகிச்சை தான் எங்கள்கடமை-மகேஸ்வரனின் மகத்தான திருவருள்தான் காக்கிறது' என்றுமருத்துவர்கள் கூறுவதுவழக்கம். எம். ஜி. ஆர். சென்னை "அப்பலோ" மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும், அமெரிக்காவிற்குச் சென்றிருந்த போதும், தமிழகக் கோயில்களில் பிரத்தியேகமான பிரார்த்தனைகள் செய்யப்பட்டன. எல்லா மதத்தினரும் தத்தம் கோயில்களில் வழிபாடுகள் செய்தனர். ஆராதனைகள் புரிந்தனர். எம். ஜி. ஆர். நோய்வாய்ப்பட்டிருந்த சமயம், அவர்தம் மனைவியாரின் சகோதரர் திருக்கடவூரில் விசேஷ அபிஷேக ஆராதனையும் வழிபாடும் புரிந்தார். மிருத்தியுஞ்ஜய ஹோமம் (ஆயுள் ஹோமம்) நிகழ்த்தப்பட்டது வணக்கத்திற்கும் வழிபாட்டிற்குமுரிய நம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைத் தரிசனம் செய்தார். தையல்நாயகி உடனுகிய ஸ்ரீ வைத்தியநாத சுவாமி பிரசாதமும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசாமி பிரசாதமும் ஆசீர்வதித்து அவர் மூலம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வழங்கி அருளினர்கள். "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்" அல்லவா ஆண்டவன்? எண்ணற்ற மக்கள் பிரார்த்தனை புரிந்தனர். ஆண்டவன் அருளால் எம். ஜி. ஆர். பூரண நலமுற்று மீண்டார். பிரார்த்தனை செய்துகொண்ட பலர் முடி எடுத்துக்கொண்டனர். அமைச்சர்கள் சிலரும் முடிக்காணிக்கை செலுத்தினர். அவன் அன்றி ஓர் அணுவும் அசையாதுஅன்றோ! கடுமையான நோய்களுக்கு ஆட்பட்ட எம். ஜி. ஆர். கடவுள் அருளால் மக்கள்செய்த மகத்தான பிரார்த்தனையால் குணமுற்றுத் தமிழகம் திரும்பினர். மீண்டுவந்தால் எம். ஜி. ஆர் இலாகா இல்லாத முதல்வராக இருப்பார் எனப்பேசப்பட்டது. ஆனல் எம். ஜி. ஆர் நலமுடன் வந்து தாமே சகல பொறுப்பும் கொண்ட முதல்வராக-ஏனைய அமைச்சர்களைத்தாமே சிந்தித்து நியமிக்கும் நிலையில் முதல்வராகப் பதவியேற்றார் அமெரிக்காவிலிருந்துமுதல்வர்மீண்டபிறகு நம் ஸ்ரீல ஸ்ரீ குருமகாசந்நிதானம் அனுப்பி வைத்த தெய்வப்பிரசாதம் எம். ஜி. ஆருக்கு வழங்கப்பட்டது பிறிதொரு பக்கத்தில் அப்படத்தைக் காணலாம்.

மக்களின் பிரார்த்தனை மகத்தானது என்பதைக் கண்கூடாகக் கண்டு கொண்டுவிட்டோம். நோயிலும் ஒரு புரட்சி. அவரை வைத்துத் திருவருள் ஒரு புரட்சியை நிகழ்த்தியது எனலாம்.

பிரார்த்தனையின் சக்தி :

மார்க்கண்டேயர் பிரார்த்தனையால்–இறைவன் திருவருளால் காலனையும் வென்று நின்றார். அமெரிக்க ஜனாதிபதி ஐஸன் ஹோவர் வரலாற்றிலேயும் பிரார்த்தனையின் வலிமையைப் பார்க்கலாம். இளமையில் – பள்ளிப் பருவத்தில் பூட்ஸில் இருந்து தேள்கொட்டிக்கால் வீங்கியது. பிரார்த்தனையால் அவர் இறப்பிலிருந்து தப்பியதை அவர்வரலாறு அறிவிக்கிறது.

பிரார்த்தனை என்பது தூய உள்ளத்தோடு மனமுருகி இறைவனை வேண்டி வழிபடுதலாகும். இதன் பெருமையை எல்லாச் சமயங்களும் பெரிதும் எடுத்தியம்புகின்றன. பிரார்த் தனையைப்பற்றிப் பலரும்புகழ்படக்கூறியுள்ளனர். அமெரிக்கத் தத்துவமேதை டாக்டர் அலெக்ஸிஸ கேரல் என்பவர் " Prayer is a force as real as terrestrial gravity " – " பிரார்த்தனை என்பது பூமியின் ஆகர்ஷண சக்தியை ஒப்ப ஓர் ஆற்றல் மிக்க சக்தி யாகும் " பிரார்த்தனை மூலமாக உயிர் பிழைத்தலைப் பழைய வரலாறுகளில் பார்க்கிறோம். ஆனால் இன்று எம். ஜி. ஆர். வாழ் வில் கண் கண்ட காட்சியாகக் கண்டு மகிழ்கிறோம். இன்று முதல்வர் – புரட்சித் தலைவர் – பொன்மனச் செம்மல் பிரார்த்தனை யால் ஏற்படும் பயன் பற்றிப் புதியதோர் வரலாறு படைத்து விட்டார்.

பெரியார் பாசறையிலிருந்து கிளைத்த அ. தி. மு. க. வினர் பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை அற்றவர் என்றே மக்கள் கருதி வந்தனர். ஆனால் எம். ஜி ஆர். உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தபோது – பக்தரினும் பக்தராக – பலரும் தெய்வத் துணையைக் கோரினர். பலர்கோயில்களில் அங்கப்பிரதட்சணம் புரிந்தனர். பாதயாத்திரை மேற்கொண்டனர். வேள்விகள் நடத்தினர். கூட்டுப்பிரார்த்தனையில் ஈடுபட்டனர். முதல்வர் எம். ஜி. ஆர். கூடத்தனிப்பட்ட முறையில் மந்திரஜெபம் வைத் திருக்கிறார் என அறிகிறோம். பிரார்த்தனை தரும பெரும்பயனை முதல்வரது வாழ்வில் நிதர்சனமாகக் காண்கிறோம். அதிலும் ஒரு புரட்சி செய்து புதுமை கண்டுள்ளார்.

புரட்சித்தலைவரின் புரட்சிவாழ்வு :

திரையுலகில் எம். ஜி. ஆர். புரட்சி காட்டியவர். புரட்சிகர மாக நடித்தவர். நல்லவராக நடித்து நல்ல மனப்பான்மையை வளர்த்து நாட்டு மக்கள் நெஞ்சங்களில் குடிபுகுந்தவர்.

நாட்டாட்சியிலேயும் புரட்சிகாட்டியவர். நாட்டுமக்களுக்கு நல்லபல திட்டங்கள் தீட்டி நலம் புரிபவர். மூன்றும் முறையாக முதல்வராகப் பதவி ஏற்றுள்ளார் என்றால் மக்கள் அவரிடம் எத்தனை பற்று வைத்திருக்க வேண்டும்?

புரட்சித் தலைவர் வாழ்வில் இறைவனும் ஒரு புரட்சியைச் செய்திருக்கிறான். நால்வகை நோய்களால்தாக்குண்ட முதல்வர் உயிர்பிழைப்பாரா என்று எல்லோரும் அஞ்சிய நிலையில் அனைவரும் வியக்கும் வண்ணம் உயிர் கொடுத்ததோடு உடல் நலமும் அளித்து உயர்த்தியுள்ளான்.

இறைவன் அருளிய புரட்சிக்கு நன்றிக்கடனாகப் புரட்சித் தலைவர் நம் முதல்வர் ஆண்டன் திருக்கோயில்களும், அற நிலையங்களும் புரட்சிகரமாக வளர ஆட்சி புரிவாராக என வாழ்த்துகிறது ஞானசம்பந்தம்.

திருமடங்களும், திருக்கோயில்களும் மற்றைய அறநிறு வனங்களும் நாட்டுமக்களை நன்னெறிப்படுத்தவே ஏற்பட் டவை. அத்தகைய ஸ்தாபனங்கள் இன்று வருவாய் அற்று வளம் குன்றி வாடித் தவிக்கின்றன. அவற்றிற்குக் கிடைக்க வேண்டிய வருவாய் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழிவகை களைச் செய்து புரட்சி நிகழ்த்துவார் என அறநெறிப்பட்ட ஆன்றோர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கல்விநிலையங்களில் அனைத்துச்சமய போதனைகள் அல்லது அறநெறிப் போதனைகள் கட்டாயப் பாடம் ஆக்கப்பட வேண்டும். அனைத்துச் சமயத் திருக்கோயில்களிலும் வழிபாடு சரியாக நடைபெற வழிகோல வேண்டும். அவரது ஆட்சியை யும் மக்களையும் வாழ்வாங்கு வாழ்விக்கும் வழி இதுவே ஆகும். தக்கமுறையில் மக்களுக்கு வழிகாட்டி, மக்களை வழிப்படுத்தி வளமுடனும், நலமுடனும், நல்லாட்சி நடத்தி வாழ வாழ்த்துகிறோம்.

அருள்நெறியாளர் தொடர்புற்று ஆன்மீகத் துறையில் ஈடு பட்டு ஆண்டவன் திருவருளைப்பெற்றுப் புரட்சிகரமாக வாழ வாழ்த்துகிறோம்.

பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து பைந்தமிழ் நாட்டின் பண்பாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபட வாழ்த்துகிறோம்.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

புதுக்குடி கிராமத்தில் எழுந்தருளியிருக்கும்

சிவன்கோயில், திரௌபதியம்மன் திருக்கோயிலுக்கும்,

அரிஜனகாலனியில் எழுந்தருளியிருக்கும்

அருள்மிகு. மாரியம்மன் திருக்கோயிலுக்கும்

எழுந்தருளி வழிபாடு நிகழ்த்தியபோது

மார்கழிமாதப் பஜனை நிறைவுவிழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

16—1—1985

" வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே"

நான்கு திருநாட்கள் :

இன்றைய தினம் கரிநாள். ஒவ்வொரு மாதத்திலும் மாதக் கரிநாள் வரும். சுப முகூர்த்தநாள் வருவதுபோல இந்தநாளும் மாதந்தோறும் வரும். இந்நாளில் உலகியலில் நல்ல காரியங்களைச் செய்வதில்லை. மார்கழிமாதக் கடைசிநாளைப் போகிப்பண்டிகை என்றும் தைமாதம் முதல்நாளைப் பொங்கல் புதுநாள் என்றும், இரண்டாம் நாளை மாட்டுப்பொங்கல் என்றும் மூன்றாம்நாளைக் கரிநாள் என்றும் கூறுவர். இந்த நாளைக் கன்னிப்பொங்கல் என்றும் கன்றுப் பொங்கல் என்றும் கூறுவதுண்டு. இந்தத் திருநாட்களைப் பற்றி இங்கு இன்று சிந்திப்பது பொருத்தமாகும்.

பீடுடைய மாதம் :

மார்கழி மாதம் மாதங்களிலேயே மிகவும் உயர்வானமாதம், அதனால் அதனைப் பீடுடைய மாதம் என்பர். பீடுடைய மாதத்தைப் பீடை மாதம் என்று சிலர் தவறாகக் கூறிவருகின்றனர். 'மாதங்களில் நான் மார்கழியாகிறேன்' என்று கண்ணபிரான் கீதையில் கூறியுள்ளார். இந்த மாதத்தில் அதிகாலையில்எழுந்து நீராடிப் பக்திப்பரவசத்துடன் திருக்கோயில்வழிபாடுசெய்வதும் வீட்டின் முன் அலங்காரக் கோலங்கள் இட்டு மகிழ்வதும் திருக்கோயில்கள் தோறும் பக்திப் பாடல்கள் ஒலிபரப்பப்படுவதும் எங்கும் காணக்கிடைக்கும் காட்சிகளாகும். இந்த மாதத்தில் இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பெறும். ஆனால் மனிதர்கள் புது வீடுகளில் குடிபுகுதல், திருமணம் புரிதல் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்துவதில்லை இம்மாதம் இறையருளைப் பெறுவதற்கு வழிபாடு செய்வதற்கென்றே அமைந்த பெருமாதமாகக் கருதுவதால் உலகியல் நிகழ்ச்சிக்கு இதனைக் கொள்வதில்லை. இம்மாதத்தில் ஆருத்ரா தரிசனமும் வைகுண்ட ஏகாதசியும் அமைந்துள்ளன

மார்கழி மாதம் 30 நாட்களும் அதிகாலையில் குளிர்ந்தநீரில் நீராடினால்உடலுக்குநலன்சேரும். மின் ஆற்றல்அதிகாலைத் தண்ணீரில் உண்டுஎன்று ஆய்வறிஞர்கள் கூறுகின்றனர். குளிர்ந்த நீரில் நீராடுவதால் உடல்நலமும், நோன்பு நோற்று வருவதால் உயிர்நலமும் பெறுவதற்கு இம்மாதம் வாய்ப்பாக அமைந்துள்ளது. இங்ஙனம் இருவித நலங்களும் தரும் இம்மாதத்தைப் பீடுடைய மாதம் என்று அனைவரும் உணர்தல் அவசியமாகும்.

போகிப்பண்டிகை :

இந்த மார்கழிமாதத்தின் கடைசிநாளைப் போகிப்பண்டிகை என்பர். போகி என்றால் போக்கி என்பதன் மரூஉ என்று கொண்டு எல்லா விதமான தீமைகளைப் போக்கும் பண்டிகை என நினைந்து பழம்பொருட்களை அப்புறப் படுத்தி வீட்டைத் தூய்மைப் படுத்துகின்றனர். ஆனால் போகிஎன்பதற்கு இந்திரன் என்றும் பாம்பு என்றும் நிகண்டு பொருள் கூறுகிறது. எனவே போகிபண்டிகை என்றால் இந்திரனை வழிபடும் திருநாள் என்று கொள்வதேபொருத்தமாகும். இந்திரன்மழைக்குத்தலைவனாகவும் மழைகாரணமாக உலக இன்பங்களை நல்குபவனாகவும் இருப்பவன் ஆதலின் அவனை நன்றியறிதலுடன் வழிபடுகிறோம்.மேலும்

காலா காலத்தில் மழை பெய்யவும் அதன் வழி உலகம் இன்ப முறவும் ஏதுவர்கும் என்றெண்ணிப் பயன்பெறும் இந்தநாளில் இந்திரனை வழிபடுகின்றனர். அசுத்தம் நீங்குதல் இன்பத்தை நல்குதற்கு உதவும் ஆதலின் இந்நாளில் வீட்டைச் சுத்தப் படுத்தவும் செய்கின்றனர்.

கதிரவன் பொங்கல் :

அடுத்தநாள் – தைமாதம் முதல் நாள் சூரியனை வழிபடும் திருநாளாக அமைத்துக் கொண்டாடி வருகின்றனர். சூரிய வெளிச்சம் பயிர்களின் நலனுக்கு மிகவும் தேவை ஆதலின் அதனைத்தருகின்ற அருக்கனை நன்றியறிதலோடு வணங்கி வழி படுகின்றனர். வாசலில் புது அடுப்புவைத்துப் புதிய அரிசியில் பொங்கல் இட்டுச் சூரியனுக்கும் படைத்து வழிபடுகின்றனர்.

மாட்டுப் பொங்கல் :

அடுத்தநாளைக் காளை மற்றும் பசுக்களுக்குரிய நாளாகக் கொண்டாடி வருகிறோம். மாடுகள் தம் உழைப்பினால் விளைந்த சத்தான நெல்மணிகளை நமக்களித்துச் சக்கையான வைக் கோலை உண்டு தியாக வாழ்வு வாழ்கின்றன. அந்த உதவியை நினைந்து போற்றுகிறோம். ஒருநாளாவது அவ்வானினங்களை அடிக்காமல் விரட்டாமல் போற்றி வழிபடுதற்கென்று இந்த நாளைப் பெரியோர் அமைத்துள்ளனர். ஆனால் இந்தத் தஞ்சை மாவட்டத்தில் அந்த நாளில் தான் காளைகளை அடிப்பதும் வண்டியில் பூட்டி வேகமாகப் போட்டி போட்டுக் கொண்டு ஓட்டுவதும் விரட்டுவதும் நடைபெறுகின்றன. இது நன்றியறித லாகாது, தவறான முறையாகும்.

கன்றுப் பொங்கல் :

இதற்கு அடுத்தநாளாகிய இன்றையநாள் கரிநாளாகும். கன்றுப் பொங்கல் என்றும் கூறுவர். இந்நாளில் கன்றுகளுக்குச் சூடுபோடுவதும் கொம்பைத் தீத்துவதும் காதினை அறுப்பதும் செய்வர். இவைபார்ப்பதற்குக்கொடுமைகளாகத்தோன்றினாலும் அக்கன்றுகளின் உடலுக்கு நன்மைதருவனவாகவே நோய் தடுப்பாகவே அமைகின்றன. குழந்தைகளின் வளர்ச்சிக்குக் காதுகுத்துதல்போன்றவற்றைச் செய்தல்போலவே கன்றுகளின் வளர்ச்சிக்கும் நோய்நொடிவாராமல் தடுப்பதற்கும் இவை செய்யப்படுகின்றன. கொம்பு தீத்துவதால் பசுவிற்கும் காளைக் கும் சுண்ணம்புச்சத்து கூடுகிறது, உடல் கட்டாக இருக்கிறது, தெக்குத்தி மொட்டைக்காளைகளால் இதனை அறியலாம்.

கன்னிப்பொங்கல் :

இந்தக் கரிநாளைக் கன்னிப்பொங்கல் என்றும் கூறுவர். மார்கழி மாதம் 30 நாட்களும் பாவை நோன்பு நோற்றுவரும் பெண்கள் தங்களுக்கு நல்ல பண்பு நலம்சான்ற கணவன் வாய்க்க வேண்டும் என்ற நோன்பை - வேண்டுகோளை இன்று நிறைவு செய்கின்றனர். வாழ்க்கையின் வளத்திற்கு மிக இன்றியமையாது அமைய வேண்டுவது ஒருநல்ல கணவனுக்குக் கற்புடையமனைவியும் ஒருநல்ல மனைவிக்கு ஒழுக்கத்தில்சிறந்த கணவனும் வாய்த்தல் ஆகும். இத்தகைய வாய்ப்பை இறையருள்தான் நல்க இயலும் என்று அப்பெண்கள் இந்த நாட்களில் திருவெம்பாவை திருப்பாவை ஆகிய பாடல்களைப் பாராயணம் செய்துநோன்பு நோற்றுவேண்டுகின்றனர். இந்தக் கரிநாளில் அவர்களின் நோன்பு நிறைவு பெறுவது என்று கொண்டு, இந்த நாள் அவர்களுக்குரிய திருநாளாகக் கன்னிப் பொங்கல் என்று போற்றப்படுகிறது.

யார் தலைவன் ?

இதுவரை இந்தத் திருநாட்களைப் பற்றிச் சிந்தித்தோம். இனித் திருக்கோயில்களைப் பற்றி ஒருசிறிது சிந்திப்போம். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனைத் திருக்கோயிலில் வைத்து வழிபடுகின்றோம். உடலுறுப்புக்களிலே தலை எங்ஙனம் சிறந்ததோ அதுபோல உலக மக்களிடத்திலே தலைவன் சிறந்தவனாகக் கருதப்படுகின்றான் தலையே மற்ற உறுப்புக்களின் இயக்கத்திற்குரிய இயக்குநராக இருக்கிறது அதுபோலத் தலைவனும் மற்ற மக்களின் நல்வாழ்வு இயக்கத்திற்குத் துணை செய்பவனாக இருக்கின்றான். அந்தத் தலைவன் யார் ? எல்லாம் வல்ல இறைவனே ஆவான். அதனால்தான் அப்பரடிகள், “தந்த தலைவன்” என்று அருளுகின்றார் அப்பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் இன்று நாடெங்கும் போற்றுவாரின்றி, கேட்பாரற்றுக்கிடக்கின்றன.

சிதைந்து கிடக்கும் சிவன்கோயில் :

இந்த ஊரில் அரிஜன காலனியில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலும் ஊரின் நடுவில் அருள்மிகு திரௌபதி அம்மன் திருக்கோயிலும் உள்ளன. இவற்றுடன் ஓர் அழகிய சிவன் திருக்கோயிலும் உள்ளது. அக்கோயில் இடிந்த நிலையில் காணப்படுகிறது. மேற்கூரை கூட இல்லாத நிலையில் சில

சிவலிங்கங்கள் வெயிலிலும் மழையிலும் காயவும் நனையவு மாக உள்ளன. மற்ற திருவுருவங்கள் வெளியில் கீற்றுக்கொட்ட கையில் இருக்கின்றன. இங்ஙனம் நமக்கு அருள் வழங்கும் இறைவனின் திருவுருவங்கள் சிதைந்தும் வெயிலிலும் மழையிலும் கிடப்பதால் அவற்றிற்கு ஒன்றும் குறைவு இல்லை. நமக்குத் தான் குறை. "கல்லிலும் செம்பிலுமா இருப்பான் எங்கள் கண்ணுதல்" என்றார் ஒரு சித்தர். இந்தத் திருக்கோயிலில் நல்ல அழகான கலைநலம் சிறந்த திருவுருவங்கள் உள்ளன. பச்சைக் கற்களில் புராதனச் சிறப்புடன் திகழ்கின்றன. இத் திருக்கோயிலைக் கட்டியவன் இன்று இருந்து பார்த்தால் கண்ணீர்விட்டுக் கதறுவான். நாம் இவற்றைக்கண்டும் கவலைப் படாமல் களிப்புறுகிறோம். இறை நம்பிக்கையும் பரம்பொருள் உணர்வும் நமக்கு இருந்தும் இத்தகு நிலைகளுக்கு உரிய பரிகாரம் தேடாது வாழ்வதால்தான் இன்று நாடு இந்த அவல நிலைக்கு ஆளாகியுள்ளது இந்த ஊரில் உள்ளோர் இதனை ஆழ்ந்து சிந்தித்து இத்தகு திருவுருவங்களை நல்லதொரு மண்டபத்தில் வைத்துப் பூஜைகள் செய்துவந்தால் மனமகிழ்வுடன் வாழமுடியும்; எதிர்பார்த்தபடி நல்ல மகசூல் கிடைக்கும்; வாழ்வு பொருள் வளத்துடன் கொழிக்கும். ஐயமே இல்லை. செய்து பாருங்கள்; சிறப்புறுவீர்கள்.

பொதுச்சொத்தை அழிக்கலாமா?

எந்தநல்லகாரியங்களையும் செய்வதற்குத் தேவைப்படுவன ஒற்றுமையுணர்வும் கடுமையான உழைப்புமே ஆகும். இங்குள்ளோர் நினைத்தால் ஒரேமாதத்தில் இந்தத்திருக் கோயிலைச் செம்மைப்படுத்தி ஒரு குடமுழுக்கு விழாவை நடத்திவிடமுடியும். உங்களுக்கு இந்த நல்லுணர்வு வந்துவிடுமானல் அதுவே உங்களின் நல்வாழ்வுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக அமையும். "யானைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே" என்பது போல நல்லுணர்வு முன்னே வந்தால் உங்கள் நல்வாழ்வு பின்னே வரும். யார் யாரோ செய்வார்கள் என்று எதிர்பார்த்து வாழாமல் நம் ஊர்த்திருக்கோயிலை நாமே செம்மையாகத் திருப்பணிசெய்வோம் என்ற எண்ணம் நமக்கு வர வேண்டும். நமது ஊர்; நமது சொத்து என்ற உணர்வு நமக்கு வேண்டும். நமது நாட்டில் தான் நம் அரசுப்பொருள்; நம் முன்னோர்கள் அமைத்துச் சென்ற பொதுப் பொருள் என்ற எண்ணத்தில் அவற்றைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு இல்லை. வெளிநாடுகளில் இந்த உணர்வுதான் அவர்களை வாழ வைக்கிறது. ஜப்பான் போன்ற நாடுகள் இதற்கு

முன்னுதாரணங்களாகத் திகழ்கின்றன. ஜப்பான் நாட்டில் ஒரு முறை நடந்த ஒரு நிகழ்ச்சியை ஒருவர் கண்டு வந்து கூறினர். ரயிலில் ஒரு கிழிந்த இருக்கையை ஒருவர் தைத்துக் கொண்டு இருந்தார். அருகிலுள்ள வெளிநாட்டவர் நீங்கள் யார்? ஏன் இதைத் தைக்கின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர், “நான் இந்த நாட்டுக் குடிமகன்; இது என்னுடைய தேசச் சொத்து; ஆதலின் இதைத் தைத்துச் சரிப்படுத்துகின்றேன்” என்றார். இந்த எண்ணம் எங்காவது நம் நாட்டில் உள்ளதா? ரயிலில் உள்ளபல்லை உடைப்பதும், கழிவறையில் தண்ணீர்க் குழாயைத் திறந்துவிட்டு வந்துவிடுவதும் ரயிலிலும் பேருந்திலும் இருக்கும் இருக்கைகளை உடைப்பதும் கிழிப்பதும் மின் விளக்குகளைத் திருடுவதும் உடைப்பதும் பேருந்துகளைக் கொளுத்துவதும் இவைகளைத்தானே காணமுடிகின்றது. இந்நிலைமாறும் நாள் எந்நாள் வரும்? பட்டமும் பள்ளிக்கூடங்களும் எண்ணிக்கையில் பெருகி என்ன பயன்? வளர்ச்சியைத் தராத பண்பை வளர்க்காத பட்டங்களினல் நாட்டுக்கு என்ன லாபம்? இதனை உண்மையான அரசியல் வாதிகளாவது சிந்தித்தல் அவசியமாகும்.

உழைப்பே உரியவழி :

இதுபோன்று அருளியல் பொதுச் சொத்தாகிய திருக்கோயில்களும் கேட்பாரற்றுக் கிடப்பதும் ஆங்குள்ள பொருள்கள் ஒவ்வொன்ருகக் களவாடப் பெறுவதும் நாட்டுக்கு நலன் தருமா? இவைகள் அனைத்தும் மனமாற்றத்தால் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பின்னர் அனைவரும் ஒன்று கூடிக் கடுமையாக உழைத்துப் பாடுபட்டால் நம் நாடும் ஜப்பான் போன்று உலகவல்லரசுநாடுகளில் ஒன்ருகத் திகழும் என்பதில் ஐயமே இல்லை. முப்பது கோடி மக்கள் இருந்த பொழுது இருந்த அதே இந்தியநிலப் பரப்பளவுதான் இன்று 75 கோடிமக்கள் வாழ்கின்றபொழுதும் இருக்கிறது. ஆகவே தான் வறுமையும் சூதும் களவும் ஏமாற்றும் நிலையும் கொலையும் பெருகி உள்ளன. இவை மாற உழைப்பு ஒன்று தான் வழி! உழைப்பு உழைப்பு உழைப்பு – அதுஒன்றே இந்த நாடு முன்னேற உரிய தாரக மந்திரம் ஆகும். திருவள்ளுவர் இக்கருத்தை அன்றே சிந்தித்து இலர் பலராவதற்குக் காரணம் தவக்குறைவே என்று கூறியுள்ளார். நோற்பார் சிலரும் நோலாதார் பலருமாக இருப்பதனுலேயே உள்ளவர் சிலரும் இல்லாதார் பலருமாக இருக்கின்றார்கள் என்று கூறியுள்ளார்.

" இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர் "

என்பது அக்குறள். இங்கு நோற்றல் என்பது தவத்தைக் குறிக்கும். தவம் என்பது புறஉறுப்புக்களை அடக்கி உள்ளுறுப்புக்களை உழைக்க வைத்து மேற்கொள்வது. ஆகவே அதுவும் உழைப்பே ஆகும். எனவே உள்ளுறுப்புக்களின் உழைப்பும் புற உறுப்புக்களின் உழைப்பும் மிகுமானல் வறுமை விலகி வளம் சேரும் என்பதில் ஒரு சிறிதும் ஐயம் இல்லை.

வாழ்த்து :

இந்த உழவர் திருநாளில் இதனை அனைவரும் உணர்தல் அவசியம். உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்து நாட்டை வளப்படுத்தி அதன்வழி தம்மையும் வளப்படுத்தி வாழக் கற்றுக் கொள்வீர்களாக! சிலர் தம்மைப் பலப்படுத்தி நாட்டைப் பலவீனப் படுத்த முனைகிருர்கள். இது தவருன நோக்கமாகும். இதனுல் அழிவது நாடுமட்டுமல்ல; அவர்களும்தான்.

நம்மை வாழவைத்தருளும் பெருமானின் திருக்கோயில்கள் நம் பார்வையில் செழிப்புடன் காணப்பட்டால் நம் வாழ்வும் செழிப்புடன் விளங்கும் என்பதையும் மனத்தில் கொண்டு அனைவரும் ஆக்கவழிகளில் பணிபுரிவீர்களாக!

இந்த எண்ணங்கள் மக்களின் மனத்தில் ஆழ வேருன்றி அவர்களின் செயல்முறைகள் சிறக்கவும் அதன்வழி அவர்கள் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழவும், இவ்விழாவை ஆண்டு தோறும் சிறப்பாக நடத்திவரும் அனைவரும் நலம்பல பெற்று நீடுவாழவும் எல்லாம்வல்ல ஸ்ரீசெந்தமிழ்ச்சொக்கன்திருவருளைச் சிந்திக்கின்ளேம்.

உழைப்பே உயர்வுதரும்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம்.

தருமையாதீனத்தில் நடைபெற்ற
அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கின்போது
சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தைத்
தமிழகச் சட்டசபை சபாநாயகர்
மாண்புமிகு க. ராசாராம் அவர்கள்
தொடங்கிவைத்து ஆற்றிய

பேருரை

(மலர் 44, இதழ் 2, பக்கம் 83 இன் தொடர்ச்சி)

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வாள்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்

(சிலப்பதிகாரம்-5. 169-172)

மணிமேகலைக் காப்பியத்திலும் சாத்தனுர் சிவனுக்கே ஏற்றம் தந்து கூறியுள்ளார்.

நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாய்ப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈருக.

(மணிமேகலை-1. 54-55.)

சங்க காலம் தமிழின் பொற்காலம் என்று சாற்றப்பட்டால், பல்லவர் காலத்தைச் சைவ சமயத்தின் பொற்காலம் எனப் புகழலாம். ஏனெனில், இக்காலக்கட்டத்தில் தான் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் தோன்றி,

திசையனைத்தும் பெருமையெலாம்
தென்றிசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும்
மேதினியே தனிவெல்ல
அசைவில் செழுந் தமிழ் வழக்கே
அயல் வழக்கின் துறை வெல்ல
இசை முழுதும் மெய்யறிவும்
இடங்கொள்ளும் நிலைபெருக.

மேன்மைகொள் சைவ நெறி மேதினியில் தழைக்கப் பாடு பட்டார்கள். திருச்சிராப்பள்ளியில் உச்சிப் பிள்ளையார் கோயி லுக்குச் செல்லும் வழியிலுள்ள பழைய கல்வெட்டு ஒன்று "இலிங்கத்தை வழிபடும் குணபரன் என்னும் அரசன் புறச் சமயத்தில் இருந்து திரும்பப் பெற்ற ஞானப் பேரொளியானது இந்த இலிங்கத்தின் வாயிலாக நெடுங்காலம் இவ்வுலகில் நின்று நிலவுவதாக" என்ற வாசகங்களைக் கொண்டுள்ளது. இதனைக் குறிப்பிடுவதே போன்று

வீடறியாச் சமணர் மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை நகரின்கண் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில் அமர் பள்ளியொடு பாழ்களும்
கூடஇடித்துக் கொணர்ந்து குணபரஈச் சரம் எடுத்தான்

சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் திருநாவுக்கரச நாயனார் புராணத்தில் குறிப்பிட்டிருப்பது கொண்டும் வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தும் நாம் ஒரு முடிவுக்கு வருவோமே யானால், நாவுக்கரசரால் சைவனாக மாற்றப்பட்ட மன்னன் மகேந்திரவர்ம பல்லவன் என்பது தெரியவரும். இந் நிகழ்ச்சி சைவசமய வரலாற்றில் குறிப்பிடத் தக்கதொரு நிகழ்ச்சியாகும். மகேந்திரவர்ம பல்லவ மன்னனின் மகனாகிய முதலாம் நரசிம்ம வர்ம பல்லவன் பரஞ்சோதி என்னும் தன் சேனைத் தலைவருடன் வாதாபிமேல் படையெடுத்துச் சென்று இரண்டாம் புலிகேசி என்னும் சாளுக்கிய மன்னனை வென்ற செய்தியினைப் பெரிய புராணம்,

மன்னவற்குத் தண்டு போய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத் துளை எநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக் குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்ன எண்ணில கவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்

என்று குறிப்பிடுகின்றது. பரஞ்சோதியே பின்னாளில் சிறுத் தொண்டரானார் என்பது வரலாறு.

சோழர் காலச் சைவம் :

பிற்காலச் சோழ மன்னர்கள் ஆண்ட காலம் மொழிக்கும், சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் பொற்காலம் எனப் போற்ற லாம். வரலாற்றறிஞர்கள் பலரும் இக்காலத்தினைப் பொற் காலம் எனப் போற்றுவர். "சோழ மன்னர்கள் எல்லாருமே சிறந்த சிவபக்தர்கள், என்றாலும் மற்ற சமயங்களிடத்துப் பொறையுடையவர்கள்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

Without exception were votaries of the God Siva, but as a rule, were tolerate of the other sects in the normal Indian manner " (Vincent Smith's History of India)

சோழ மன்னர்களில் கண்டராதித்த சோழரும் அவர்தம் இல்லத்து அரசியார் செம்பியன்மாதேவியாரும் ஆற்றியுள்ள சமய, சமுதாயப் பணிகள் கணக்கிலவாம். சுந்தரசோழன் மகன் முதலாம் இராசராசன் தஞ்சையில் பெருவுடையார் திருக் கோயிலைக் கட்டினன்.

" The Tamil races are the greatest temple - builders in the world and the great pakoda at Tanjore is by far the greatest temple in India. " என்று மேற்புல அறிஞர்கள் பாராட்டும் அளவிற்குப் புகழ் பரப்பி நிற்பது முதலாம் இராசராசசோழன் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோயிலாகும். இவன் மகன் முதலாம் இராசேந்திரன் கங்கைகொண்ட சோழேச்சுரக் கோயிலைக் கட்டியவன் ஆவான். மேலும், இவனுடைய ஆட்சி கடல்கடந்து கடாரம் முதலிய நாடுகள் வரை பரவியிருந்தது. எனவே இவன் கங்கைகொண்டான் என்றும், கடாரம்கொண் டான் என்றும் பாராட்டப்பெறுகிறன்.

இவனுடைய ஆட்சி அன்னிய நாடுகளிலும் பரவியிருந்த தனுல் இங்கெல்லாம் சைவசமயமும் பரவிற்று. சயாம் நாட்டு மன்னர் முடிசூட்டு விழாவில் " லோரிப்பாவாய் " என்று பாலி மொழியில் திருவெம்பாவை பாடப்பெறும் வழக்கம் ஏற்பட் டதை ஈண்டு நினைவு கூரல் நலம் பயக்கும்.

முதலாம் இராசராசன் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு, தில்லையில் பலவாண்டுகளாக அடை பட்டிருந்த மூவர் பாடிய தேவாரங்களை எடுத்து, அவர் உதவி யால் திருமுறைகளாக வகுத்து, அவைகளுக்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பெண் ஒருத்தியைக் கொண்டு பண்களை அமைத்தான். இவன் ' திருமுறை கண்ட சோழன் ' என்றும், ' சிவபாத சேகரன் ' என்றும் போற்றப் பெறுகிறன். நம்பியாண்டார் நம்பி பத்துச் சிறுநூல்களைப் பாடியுள்ளார். அவற்றுள், ' திருத்தொண்டர் திருவந்தாதி ' என்பது ஒன்று. இந்நூலைப் பின்பற்றியே சேக்கிழார் பெரிய புராணம் பாடினர்.

சைவ சித்தாந்தக் கொள்கை நெறியினைச் ' சித்தாந்த சைவம் ' எனப்பெரியோர் வழங்குவர். இது நம் தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்குமே உரிய, பழமையும் பெருமையும் மிக்க சிறப்பு நெறி எனலாம். " சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையானது, தென்னிந்தியத் திராவிடர்களின்

பேரறிவின் பெருவிளைவாகும். அது மிகப் பெரிய மாட்சிமை நலங்கள்வாய்ந்தது. இதனைத்தென்னிந்தியாவிற்கே,குறிப்பாகத் தமிழர்க்கே உரியசமயம்எனலாம் " என்று மறைத்திரு. டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் குறிப்பிட்டு இருப்பதைக் காணலாம்.

சைவ சித்தாந்தத்தை விளக்கும் முதன்மையான அடிப் படை மேற்கோட் பெருநூல்கள் அனைத்தும், தமிழிலேயே தமிழகத்துச் சான்றோர் பெருமக்களால், ஒழுங்காக வகுத்து வரையறை செய்து வைக்கப்பட்டுள்ளன. "சைவத் திருமறை கள் பன்னிரண்டும், மெய் கண்ட நூல்கள் பதினான்கும், அவற் றிற்கு மாறுபடாமல் அவற்றைத் தழுவிச் செல்லும் ஏனைய பிற நூல்களுமே, சைவ சித்தாந்தத்தின் அடிப்படை முதன்மை நூல்களாக விளங்குகின்றன" என்பது தமிழ்க் கடல் மறை மலையடிகளாரின் கருத்தாகும்.

திருவள்ளுவர் இயற்றியதிருக்குறள் என்னும் தமிழ்வேதமே பசுவாகவும், திருமூல நாயனர் அருளிய திருமந்திரம் என்னும் தமிழ் ஆகமமுமே அப்பசுவின் பாலாகவும், அப்பர், சம்பந்தர் சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர் பாடிய திருமறை களே அப்பாலின் நெய்யாகவும், மெய்கண்டார் அருள் நந்தி சிவம் உமாபதிசிவம் என்னும் சந்தான ஆசாரியர்கள் இயற்றிய சைவ சித்தாந்தக் கொள்கை விளக்க நூல்களே அந்நெய்யின் சுவையாகவும், அமைய சிறந்து விளங்குவது சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை என்று ஒரு தனிப்பாடல் சாற்றுகின்றது.

வேதம் பசு; அதன் பால் மெய்யா கமம்; நால்வர்
ஓதும் தமிழ் அதனின் உள்ளுறும் நெய் — போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய்மெய்கண்டான்
செய்த தமிழ் நூலின் திறம்.

உலகளாவிய உயர்நெறியே சைவசித்தாந்தம் :

" யாதும் ஊரே யாவரும் கேளிர் "

என்ற கணியன் பூங்குன்றன் உலகு அனைத்தையும் ஒரு குடும்ப மாகவே பார்த்தார் எனலாம்.

" தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி "

என்பதும் உலகளாவிய பெருநெறி எனலாம். (தொடரும்)

உ

சிவமயம்

"பான்மையுள்ள மந்திரம்"

புலவர், தமிழிசைமணி, திருமுறைக்கலைஞர், சிவபூஜை

திரு. வா. ச. சுந்தரேசம் பிள்ளை

சிதம்பரம்

செந்தழல்செய் வேதியர்க்கு அந்திவேளை மந்திரம்
சந்தமுள்ள மூவர்பாடல் செந்தமிழ்க்கே மந்திரம்
இந்தப்பாரை ஏற்றமாக்கும் இனிமைமிக்க மந்திரம்
பந்தபாசம் நீக்கவல்ல பான்மையுள்ள மந்திரம்

கொல்லவந்த யானை மாலை கொண்டு வந்துநின்றது
கொல்லஅனல் மூட்டினோரைக் கொன்றுவாகை வென்றது
மெல்லவெந் தழிக்கும் நீற்றைக் குளிரவைத்து நின்றது
மிண்டர்மன்னர் மனதைமாற்றி மேன்மைசூடிச் சென்றது

பயணமானல் தேவாரம் பணம்கிடைக்க தேவாரம்
சயனம்செய்ய தேவாரம் சண்டைநிற்க தேவாரம்
வயல்விளைய தேவாரம் வாழ்வுசிறக்க தேவாரம்
அயலர்பணிய தேவாரம் அகம்மகிழ தேவாரம்

கண்ணொளிக்குத் தேவாரம் பண்இசைக்க தேவாரம்
விண் அளக்க தேவாரம் வீரம்கொள்ள தேவாரம்
உண்ணுதற்குத் தேவாரம் உவப்பதற்குத் தேவாரம்
எண்ணுசெயல் கைகூட எளிதாக்கும் தேவாரம்

கன்னியர்க்கு மணம்முடிக்க புண்ணியம்சேர் தேவாரம்
காளையரைத் தக்கவராய்ச் செய்திடுமே தேவாரம்
அன்னியரை நட்புறவாய் ஆக்கிடுமே தேவாரம்
அண்டும்நோய் பகைபோக்கி அன்புகூட்டும் தேவாரம்.

ஓடம்ஒட்டி இல்லாமல் கரையில்கொண்டு சேர்த்தது
ஒவ்வோர்நாளும் அடியவர்க்கு உணவுநல்கிக் காத்தது
தோடமில்லை புலையரென்று வேள்விவலம் சூழ்ந்தது
துன்பம்செய்த அமணர்தலை வெட்கிநின்று தாழ்ந்தது.

தமிழக முதல்வருக்குத் தெய்வப் பிரசாதம்

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வழங்கியருளிய ஸ்ரீ சொக்கநாதசுவாமி பிரசாதமும், திருக்கடவூர் ஸ்ரீ அபிராமியம்மை உடனாகிய ஸ்ரீ அமிர்தகடேசுவரர், ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி பிரசாதங்களும், (வேளூர்) வைத்தீஸ்வரன் கோயில் ஸ்ரீ தையல்நாயகியம்மை உடனாகிய ஸ்ரீ வைத்தியநாதசுவாமி, ஸ்ரீசெல்வமுத்துக்குமாரசுவாமி திருவருட்பிரசாதங்களும் சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலைய விசாரணை ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் சிவாசாரியாருடன் முதல்வர் வீட்டிற்குச் சென்று நேரில் வழங்கியபோது எடுத்த படம். நிலைய ஓதுவார் தண்டபாணி தேசிகர் 'பேராயிரம்பரவி' என்று தொடங்கும் புள்ளிருக்குவேளூர்த் தேவாரத்தை இசையுடன் ஓதினார். அதில் 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருளவல்லான்' என்ற தொடரை முதல்வர் ரசித்துக் கேட்டது குறிப்பிடத்தக்கது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாசி

தருமை ஆதீனம் 26 - ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமிழக முதல்வருக்கு நல் ஆசியுரை வழங்கியருளியுள்ளார்கள்.

"தமிழக மக்களின்பிரார்த்தனைகளை ஏற்றுமகேஸ்வரன் தங்கட்குப் புனர்வாழ்வு அளித்துள்ளான். நாட்டுமக்கள் நலமுடன் வாழவும், அதற்கு அடிப்படையான அறநிலையங்கள் செழிக்கவும், தாங்கள் மீண்டும் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று நல்லாட்சி புரிந்து நலமுடன் பல்லாண்டு வாழ்ந்து பணிசெய்ய செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்" என்று தருமைஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆசியுரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

தருமபுரம் ஆதீனம் இராஜாங்கக்கட்டளை

ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம், திருவாரூர்.

திருவாரூர் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா.

அறிவிப்பு

திருவாரூர் இராஜாங்கக்கட்டளைக்குத் தஞ்சாவூர் ஜில்லா வேதாரண்யம் தாலுக்கா வண்டுவாய்சேரி வட்டம் அன்னப் பேட்டை கிராமத்தில் "இராஜன் கட்டளை" என்ற பெயரில் புஞ்சை ஏக்கர். 567 செ. 60 விஸ்தீர்ணம் உள்ள நிலங்கள் இருக்கிறது. அரசு இனாம் சட்டத்தின் கீழ் பட்டா சம்பந்தமாக விசாரணை செய்து கட்டளைக்கு பட்டா நீதிமன்றத்தில் கிடைத்திருக்கிறது. சாகுபடிதாரர்கள் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்து பெண்டிங்கில் இருக்கிறது. இந்தசந்தர்ப்பத்தில் சாகுபடி செய்பவர்கள் இந்த நிலங்கள் தங்களுக்குச் சொந்தம்போல் தஸ்தாவேஜுகள் ஏற்படுத்தித்தகட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்ய ஏற்பாடுசெய்வதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இந்த நிலங்கள் வேறு யாருக்கும் சொந்தம் இல்லை. பராதீனம்செய்ய உரிமையும் இல்லை. எந்த தஸ்தாவேஜுகளும் செல்லத்தக்கதல்ல. கட்டளையைக் கட்டுப்படுத்தாது. சாகுபடிதாரர்கள் இந்த நிலங்களில் சவுக்கு மரங்கள் சாகுபடி செய்து இருக்கிறார்கள். இதில் கட்டளைக்கு பாதி வீதம் உள்ளது. இதிலும் சிலர் வெட்டுகிறார்கள். அதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

N. தியாகராஜன்,
அட்வகேட், திருவாரூர்.

கட்டுரை எண். 56

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A., D. U. N., I. U.
பருத்தியூர்.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து, இவ்வுலகெங்குமாய்
நின்றாள்; அனைத்தையும் நீங்கிநிற்பாள்; என்றன்
[நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா? இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்றபெம்மானும் என் ஐயனுமே.55

அ. ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து, இவ்வுலகெங்குமாய் நின்றாள்

(1) ஆதியில் ஒருருவாய் அங்குரித்துப் பின் பல வடிவாய் விரிந்து நிற்பவளும், இவ்வுலகெங்கணுமாய் நிறைந்து நிற்பவளும் அபிராமியே என்பது பொதுவான பொருள்.

(2) 'ஒருகாலத்தில் ஒருசக்தியாக 'தோன்றினாள்' என்று பொருள் கொண்டால் அம்பிகையின் தெய்வத்தன்மைக்குக் குறைவேற்படும். ஏனெனில், ஆதியந்தமில்லா - பிறவா, இறவாப் பெருமாட்டிக்குத் 'தோன்றுதல்' என்பது இல்லை.

நிர்க்குணப்பிரம்மம், சகுணப்பிரம்மமாக வரும்பொழுது மேற்கொண்ட மூர்த்திபேதங்களையும், நீக்கமற நிறைந்த பரம் பொருள் தானே பலவாய் விரிந்த சிருஷ்டிக்ரமத்தையும் (படைப்பு முறையினையும்) இங்குக் கருத்தில் கொண்டு பொருள் கொள்ளுதல் வேண்டும்.

(3) நிர்க்குணப் பிரம்மமாய் நின்ற பரம்பொருள் அன்பர்கள் வழிபடும் பொருட்டும், உலகவியக்கத்தின் பொருட்டும் சகுணமாய் வடிவெடுத்தது. காமேச்வர காமேச்வரி இணைந்த கோலம், ஒன்றாய் அரும்பியது. அவ்வொன்றிலிருந்து

பிரமன் – லட்சுமி என மஞ்சள் நிறத்தில் இருவரும், திருமால் – அம்பிகை எனக்கரிய நிறத்தில் இருவரும், ருத்ரன் – சரஸ்வதி யென வெண்மை நிறத்தில் இருவரும் ஆக அறுவர் ஆகி விரிந்தனர். இதனைச் சக்தி ஸ்புரித்தல் என்பர். அன்னை இச் சக்தி ஸ்புரிப்பின்போது ஒன்றாய் அரும்பிப்பலவாய் விரிந்தாள்.

(4) அவ்வாறே ஒரே சக்தியான்வள் இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி எனவும், பஞ்ச மாதாக்களாகவும், ஸப்த யோகினிகளாகவும் அஷ்டமூர்த்திகளாகவும், தசமஹாவித்தை களாகவும் பலவகையில் விரிந்தாள்.

(5) சிருஷ்டிக்குமுன் அனைத்தும் அவளுக்குள் அடங்கி யிருந்தது. அவளல்லாத எதுவும் இல்லை. தன்னுள் அனைத் தையும் ஒடுக்கிய நிலையில் தனித்து நிற்கும் அவளை, சகஸ்ர நாமம் 'ஏகாகினி' – 'தனித்திருப்பவள்' அல்லது 'ஒன்றாய் இருப்பவள்' என்கிறது.

(6) பின் எங்குமாய் எல்லாமாய் விரிந்து நிற்கும் நிலையில் அவளை சகஸ்ரநாமம் 'பூமரூபா' அனைத்துமாய் இருப்பவள் என்கிறது.

(7) 'பஹுரூபா' என்பது பிறிதொருநாமம். அதாவது, பல உருவங்கள் உள்ளவள் என்பது பொருள். அவ்யக்தம், மஹத், அகங்காரம், தன்மாத்திரைகள் முதலிய பலவாயும், தேவர், மனிதர், கால்நடை, புல்பூண்டு, மரம் எனப்பலவாயும் விரிந்தாள் என உரையாசிரியர்கள் விளக்குகின்றனர்.

(8) 'எங்கெங்கும் காணினும் சக்தியடா' என்றபடி அவள் இல்லாத இடமின்றி, பார்க்குமிடமெலாம் நீக்கமற நிறைந்திருப்பவள் ஆதலால் "இவ்வுலகெங்குமாய் நின்றாள்" என்றார். ஒன்றே, பலவுருவே எனமுன்பும் குறிப்பிட்டிருக்கிறார்.

(9) அரும்பு வெகு சுலபமாக. மலராக விரிவதுபோல் ஒன்றாய் அரும்பிய அம்பிகையும் பலவாக விரிந்துவிட்டாள். அவளைப் "பூத்தவளே!" எனவும் புகழ்ந்திருக்கிறார். ஓர் அரும்பு ஒரு மலராக மட்டும்தான் மலர இயலும். ஆனால் ஒன்றாய் அரும்பிய அம்பிகையோ பலவாக விரிந்தாள். உலகெங்குமாய் நின்றாள்.

(10) எங்குமாய் இருத்தல், அனைத்தையும் நீங்கி இருத்தல் நெஞ்சினுள் பொன்றாது இருத்தல் ஆகியவற்றை சங்கீத மூர்த்தி முத்துசுவாமி தீட்சிதரின் "மாயே!" என்ற கிருதியும் எடுத்து

இயம்புகிறது. எங்குமாய் நிற்கும் நிலையினை "சமுதாயே!" என்ற சொல்லினால் குறிப்பிடுகிறார் தீட்சிதர். எங்குமாய் வியாபித்திருப்பவள் என்பதே 'சமுதாயே' என்பதன் பொருள். அப்பொருளிலேயே எங்கும் வியாபித்திருக்கும் பரந்த மக்களுலகு 'சமுதாயம்' என்று அழைக்கப்படுகிறது.

(11) "யாது மாகி நின்றாய் காளி! எங்கும் நீ நிறைந்தாய்" என்ற பாரதியாரின் பிரபலமான பாடலும் இக்கருத்தினை எளிமையாகக் கூறுகிறது.

(12) மீண்டும், சகஸ்ரநாமம் 'வியாபினி' என்று புகழுகிறது. எங்குமாய் எவற்றிலுமாய்ப் பரவி நிற்பவள் என்பது அதன் பொருள்.

ஆ. அனைத்தையும் நீங்கிநிற்பாள்

(1) அவ்வாறு உலகெங்குமாய் நின்றவளே எல்லாவற்றையும் கடந்து நிற்பவளும் ஆவாள்.

(2) ஒன்றுபலவானதைக்கூறி எங்கும் நிறைந்திருத்தலாகிய கலந்தநிலை முதலில் கூறப்பட்டது. இப்போது அனைத்தையும் கடந்தநிலை கூறப்படுகிறது.

(3) "ஒருவனே எல்லாம் ஆகி அல்லவாய் உடனும் ஆவான்" "உலகு எலாம் ஆகி வேறு ஆய் உடனும் ஆய்" ஆகிய சிவஞான சித்தியார் அடிகள் இங்கு ஒப்பு நோக்கிச் சிந்தித்தற்குரியன.

(4) 'லோகாதீதா' — 'உலகைக் கடந்தவள்' என்றும் 'சர்வாதீதா' — அனைத்தையும் கடந்தவள் என்றும் சகஸ்ரநாமம் போற்றுகிறது. கண்ணால் காணக்கூடியதும், கேள்விப்படுவதுமாகிய உலகங்கள் மற்றும் காண முடியாத உணர முடியாத 'காலம்' முதலாய தத்துவங்கள் அனைத்தையும் கடந்து நிற்பவள் அம்பிகை.

(5) அனைத்தையும் நீங்கி, தனக்கெனத் தனியே அமைத்துக்கொண்ட அமுதக் கடலில் உறைபவள் அம்பிகை என சாக்த நூல்கள் புகலும். எனவே மேற்கூறிய தீட்சிதர் கிருதியில் அவளது கடந்த நிலையினை 'சுதாதரங்கிணி' என்று குறிப்பிட்டார்.

இ. என்றன் நெஞ்சினுள்ளே பொன்ருது நின்று புரிகின்றவா?

(1) எனது நெஞ்சகத்தில் நீங்காது நின்று திருவருள் புரிகின்றவாறு என்னே? என வியக்கிருர்.

(2) எங்குமாய், யாவுமாய் நின்றும் அனைத்தையும் நீங்கி நின்ருய் எனினும் எளியேனது உள்ளத்தில் என்றும் நிலைத்து நின்று திருவருள் புரிவது விந்தையாய் இருக்கிறது! அனைத்துக்கும் புறம்பாய் இருக்கும் நீ என் நெஞ்சத்தில் நின்று அருள் புரிதல் எங்ஙனம்? யான் அறியேன் கடந்துநிற்பவனே உள்ளே இருப்பதால் தான் 'கடவுள்' என்றனர் நம் முன்னேர். சிறு சொல்லில் எவ்வளவு பெரிய தத்துவம்?

(3) 'சர்வாந்தர் யாமினி' — எல்லா உயிர்களுள்ளும் உறைபவள் என்பது சகஸ்ர நாமம்.

(4) "இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்" என இறைவன் நெஞ்சில் நிலைத்து நிற்கும்நிலையினை மணிவாசகர் எளிமைபடக் குறிப்பிடுகிருர்.

(5) அதேதீட்சிதர் கிருதி 'அந்தரங்கிணி' அந்தரங்கத்தில் (உள்மனமேடையில்) இருப்பவள் எனக் கூறுகிறது.

ஈ. இப்பொருள் அறிவார் அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.

(1) இவ்வாருன உனது தன்மையின் நுண்மைப் பொருளை அறிய வல்லவர்கள், சிறு குழவியாய்ப் பிரளய வெள்ளத்தில் உறங்கிக் கொண்டிருந்த திருமாலும் எனது தலைவனுகிய சிவபெருமானுமேயாவார்கள்.

(2) எங்கும் ஒரே பிரளயவெள்ளம் சூழ்ந்திருந்த பொழுது, உலகம் எதுவும் சிருஷ்டிக்கப் படுவதற்குமுன் ஆலிலை ஒன்றின் மீது திருமால் சிறு குழந்தையாகக் கால் கட்டை விரலைச் சுவைத்தபடி அறிதுயில் செய்து கொண்டிருந்தார். "வடபத்ரம்" என்ருல் ஆலிலை, அதில் துயின்ற திருமாலை 'வடபத்ரசாயி' என்பர் வடநூலார். ஆலிலையில் துயின்ற பெம்மான் என்பது அச் சொற்றெடரின் அழகான தமிழாக்கம் ஆகும்.

அன்று என்றசொல் இங்குப்பிரளய காலத்தைக்குறிக்கிறது.

(3) " நான்சாக்த நெறியில் தன்னிகர் அற்றவன் அம்பிகை வழிபாட்டில் அனைத்தும் அறிந்தவன் — AUTHORITY " என்றெல்லாம் யாரும் கூறிக் கொள்ளுதல் அறிவீனமாகும். ஏனெனில், சக்தி குறித்த நுண்பொருள் அனைத்தும் அறிவார் இருவரே! அன்னையின் சகோதரனும், இறைவனின் புருஷசக்தியு மாகிய திருமால், அம்பிகையின் கணவன் சிவபெருமான் ஆகிய இருவரே அறிவர். எனவேதான் சாக்தவழி பாட்டு முறையான ஸ்ரீ தந்திரத்தை இறைவனே வழங்குகிறார். திருமாலை ஹயக்ரீவ ராக்கி அகத்தியருக்கு அவளது சகஸ்ர நாமமாகிய மந்திர சாஸத்திரத்தை உபதேசித்திருக்கிறார். திருமால் தனது பரசுராம அவதாரத்தில் ' பாசுராம கல்ப சூத்ரம் ' என்ற அம்பிகை வழி பாட்டு நூலை இயற்றினர்.

அம்பிகை வழிபாட்டின் உண்மை நுணுக்கங்கள் அறியாது அபிராமி பட்டரைத் தவருக விமர்சித்தவர்களுக்கும், அவ்வப் பொழுது தோன்றும் படாடோப பக்தர்களுக்கும் சரியான பதிலை அளிப்பது போல் இப்பாடலில் " இப்பொருள் அறிவார் அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என்ஐயனுமே " என்று " ஆணியடித்தாற்போற் " கூறினர்.

(4) தனது தாய்ச் சமய இறைவன் சிவபெருமானை ஈண்டு ' என் ஐயன் ' என்று குறிப்பிடுதல் சிந்திதற்குரியது.

வழிபடு தெய்வம் (இஷ்டதேவதை) மனதில் நிற்றல் இப் பாடலின் பாராயண பலன் ஆகும். (தொடரும்)

குருமணியின் அருள்மொழிகள்

ஆசாரியன்

ஆணவத்தில் மட்டும் அழுந்தி நிற்றல் கேவலநிலை என்றும் அதனோடு மாயை கன்மங்களும் சேர்ந்து பிறப்பு இறப்பில் உழல்வது சகலநிலை என்றும், மும்மலங்களும் நீங்கி இறைவனை அடைந்திருப்பது சுத்தநிலை என்றும் கூறப்படும். உயிர்கள் மாணிக்கம்போல - வைரம்போல உள்ளவை. அவற்றிற்குப் பட்டைதீட்டி விளங்கச்செய்பவனே ஆசாரியன்.

அன்பு

அதிகாரபலத்தினலோ பொருளாதார வசதியினலோ நாம் இறைவனை அழைக்கவும் முடியாது, அடையவும் முடியாது. தூய அன்பினல் மட்டுமே அவனை அடையமுடியும்.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ.,

(மலர் 44, இதழ் 2, பக்கம் 98 இன் தொடர்ச்சி.)

கங்கைநதி யானந்த வமிர்தப்ர வாகநறை
காசினிக் குதவனந்த
கல்யாண குணதரு வெனுங்காசி தழையவே
கருணைமழை பொழிவிழி களுஞ்
செங்குமுத வாய்மலர்ந் தமுதசம் பந்தரொடு
சேவலங் கொடிபிடித் தோன்
திகழானை முகன்மைந்த ருண்டுவிளை யாடச்
செழும்பால் சொரிந்த தனமும்
இங்கடியர் பசிதீர விடுமன்ன மலைவள
ரிருங்கனக பாத்திர முமொன்
றில்லையென் னுதே தருந்தருவி யுங்கரமு
மிளநகையு மிந்து முகமும்
அங்கைகொண் டரிபிரம ரஞ்சலிசெய் பொற்பதமும்
அடியனேன் காண வருவாய்
அண்டகோ டிகள்பணி யகண்ட பூரணியென்னும்
அன்னபூ ரணியன்னையே. (1)

(பொ - ரை) அண்டகோடிகள் பணிகின்ற அகண்டத்தில் நிறைந்த அன்னபூரணியே! கங்கைநதி தனது ஆனந்த அமிர்தமாம் வெள்ளத்தை உலகிற்கு உதவிட, நீயோ எண்ணற்ற மங்கலகுணங்களுடைய காசியெனும் மரம்தழைக்க விழிகளால் கருணை மழையினைப் பொழிகிருய், சிவந்த ஆம்பல் மலர்போன்ற வாய் விரிந்தமுத ஞானசம்பந்தரோடு, சேவற் கொடியோனும் முருகன், விளங்கும் யானை முகத்தவன் என்ற மைந்தர்கள் உண்டு விளையாடச் செழும்பால் சொரிந்த தனங்களும், அடியர் பசிதீர அன்னமலைவளர் பொற்பாத்திரமுடன் ஒன்றுமில்லை என்னுது தரும் அகப்பையும் கரமும், இளநகையும்

நிலவென்ற முகமும், கைகளால் அரிபிரமர் வணங்கும் பொற் பாதங்களும் கொண்டு அடியேன் காணுமாறு வந்திடுவாய்.

(கு - ரை) குமுதமலரனையவாய் - வண்ணமலர்ச் செங்கனி வாய் மணியதரம் புடைதுடிப்ப - (திருஞா. புரா-62பெரிய-புரா.) சேவற்கொடி - ' சேவலங்கொடியோன் ' காப்ப - ஏமவைகல் எய்தின்ருல் உலகே' -(குறுந்-கட. வாழ்.) தருவி-அகப்பை அரிபிரமர் அஞ்சலி செய்வது - 'நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும் அயனும் பரவும் அபிராமவல்லி' -(அபி. அந்-74) என்று பிரமன் மால் பணிவதைக் குறிப்பார் அபிராமபட்டர்.

நித்தியகல் யாணி நிரஞ்சனி நிராதங்க
நித்தியா னந்தரூபி
நிராமய புராதன பராபர நிராபாச
நிர்த்தொந்த நிஷ்ப்பிரபஞ்சி
சத்யாதி சத்யந்த மானசிங் காசனி
சத்தியுப சாந்தரூபி
சச்சிதா னந்தபரி பூரண சிதாகாச
சம்பு சமவாய சத்தி
சித்ரூபி நாதபர மானந்த ரூபியொரு
செகதீசுவரி ஞானமாஞ்
சீவனும் பிரமத்தொ டனுதியே யேகமாய்த்
திகழ்பரப் பிரமரூபி
யத்துவித சித்தாந்த முத்திதரு காசிவாழ்
அகிலநா யகர் கருணையாம்
அண்டகோ டிகள்பணி யகண்டபூரணி யென்னும்
அன்னபூ ரணியன்னையே. (2)

(பொ-ரை) நித்தியகல்யாணியாக, மறைவில்லாதவளாக, கவலையற்றவளாக, நாளும் ஆனந்த வடிவாக இருப்பவள். நோயற்றவளாக, பழமையானவளாக, மேலானவளாக, பொய்த் தோற்றமற்றவளாக, இன்பதுன்பமோ உலகப்பாசமோ அற்ற வளாகஇருப்பவள், ஆதிசக்திமுதல்குடிலாசக்தியீருகஅனைத்துச் சக்தியுமான சிங்காசனத்தில் அமர்ந்திருப்பவளாக, சத்தியுள் அடங்கியவளாக, உண்மை அறிவானந்தமாகி எங்கும்நிறைந்த அறிவுவெளியாயுள்ள சிவனைப்பிரியாதவளாக இருப்பவள்.

அறிவும்நாதமும் வடிவினள். உலகத் தலைவியான இவள் பிரமத்தோடு ஆதிமுதல் ஒன்ருய் விளங்குபவள். இரண்டற்ற சித்தாந்தமுத்தியினைத் தரவல்ல காசியில் வாழும் உலக முதல்வனின் கருணையாயுமிருப்பவள் - அண்ட கோடிகள் பணிகின்ற அகண்டத்தில் நிறைவுடைய அன்னபூரணி அன்னை.

(கு - ரை) இறைவியின் பல்வேறு இயல்புகள் கூறப்படுகின்றன. நிரஞ்சனி - மறைவற்றவள் (அஞ்சனம் - கருமை - மறைப்பு) ஆதங்கம் - கவலை. ஆமயம் - நோய். ஆபாசம் - பொய். தொந்தம் - இன்பதுன்பத்தளை. பிரபஞ்சம் - உலகம். ஆதனம் - இருக்கை - ஆதனி. அதனையுடையவர். ஜகத்-என்ற வடமொழி சகம் எனத்தமிழில் வரும்-உலகம் என்பதுபொருள். (தானலா துலகமில்லை - சகமலா தடிமை இல்லை' - திருநாவு - 4 - 40. 1)

கன்னிய குமாரியருள் காந்திமதி மீனுக்ஷி
கருணைபரு வதவர்த்தனி
கமலைப் பராசக்தி சிவகாம சுந்தரி
காழியுமை பிரமவித்தை
தன்னிகரி லாஞான அபயவர தாம்பிகை
தைய லபிராமி மங்கை
தந்தவகி லாண்டநா யகியறம் வளர்த்தவள்
தன்னருள்செய் காமாக்ஷியிங்
கென்னையாள் கௌரிஜ் வாலாமுகி யுணுமுலை
யிலங்கு நீலாயதாக்ஷி
யெழிற் பிரம ராம்பிகை யிலங்குபார் வதியாதி
யெண்ணிலா நாமருப
அன்னையாய்க் காசி முத லாகிய தலத்து விளை
யாடிடு விசாலாக்ஷியாம்
அண்டகோ டிகள்பணி யகண்டபூரணி யென்னும்
அன்னபூ ரணியன்னையே. (3)

(பொ-ரை) காசி முதலாகிய தலங்களில் விளையாடிடும் அன்னையாம் விசாலாட்சி யெனும் அன்னபூரணி பலவேறு பெயர்களையும் வடிவங்களையும் கொண்டு விளையாடுகிருள். கன்யாகுமரியில் குமரியாக, நெல்லையில் அருளும் காந்திமதியாக, மதுரையில்மீனுட்சியாக, இராமேஸ்வரத்தில் கருணை நிறை பர்வதவர்த்தினியாக, ஆரூரில் பராசக்தியாக, தில்லையில்

சிவகாம சுந்தரியாக, திருவெண்காட்டில் பிரம்மவித்தியாநாயகியாக, இறைவனுக்குச் சமானமில்லாத மேம்பாடு கொண்டவளாகத் தருமையில் ஞானம்பிகையாக, மாயூரத்தில் அபய வரந் தருபவளாக, வேளூரில் தையல் நாயகியாக, திருக்கடவூரில் அபிராமி மங்கையாக, திருவானைக்காவலில் அகிலாண்டம் தந்தவளாக, திருவையாற்றில் அறம் வளர்த்தவளாக, காஞ்சிபுரத்தில் - காமாட்சியாக, இலங்கை - கேதீச்சரத்தில் என்னையாளும் கௌரியாக, இங்குலேயில் ஜ்வாலாமுகியாக, திருவண்ணமலையில் உண்ணுமுலையாளாக, நாகபட்டினத்தில் நீலாயதாக்ஷியாக திருப்பருப்பதத்தில் அழகான பிரமராம்பிகையாக, கயிலையில் பர்வதராஜன் மகளாம்பார்வதியாக எண்ணற்ற நாம ரூபத்துடன் விளங்குகிருள்.

(கு - ரை) ஈழத்திலும் இவர் எண்ணம் ஓடும் என்பதற்கு - பின்னே 10ல்- 10வது பாடல் சான்ருகும். அதனல் 'கௌரி'- திருக்கேதீச்சர அன்னையே - எனத் துணியலாம்.

செம்பதும பீடமும் பாற்கடலும் அமுதமும்
தேனுவுஞ் செம்பொனுடுந்
தேருமேழ் புரவியு முயர்வெள்ளை யானையுந்
தேவரென் னுஞ்சேனையும்
நம்புசிந் தாமணியு மைந்தருவு மிருநிதியும்
நல்லமதி வெண்கவிகையும்
நாதா தி பூதவரை புவனமுஞ் சித்தியும்
நாட்டுமிவை யாதிபொருளும்
உம்பர்புகழ் காசியினி லுன்கடைக் கண்களிடும்
ஓரருட் பிச்சையென்றே
யுல்லாச ஆனந்த மானவுன் னடியா
ருவந்திடும் பிச்சையன்றே
அம்பிகா பதியென்னை யாண்டபதி விசுவபதி
அவிமுத்த பதியில் வாழ்வே
அண்டகோ டிகள்பணி யகண்டபூரணி யென்னும்
அன்னபூ ரணியன்னையே, 4

(பொ - ரை) செந்தாமரை மலரைப் பீடமாக்கொண்ட பிரமனை, பாற்கடலை இருப்பிடமாக் கொண்ட திருமாலாக, அமுதமும் காமதேனுவும் இருக்கின்ற செம்பொன்னுலகையாள்கின்ற குபேரனை, ஏழுகுதிரைபூட்டிய தேருடையசூரியனை

மேன்மையான வெள்ளையானையினையும் தேவர்களாம் சேனையுமுடைய இந்திரனுக — அன்னை அன்னபூரணியின் கடைக்கண் பார்வையால் ஆகிவிடலாம். நினைத்ததைத் தருமென்று நம்பப்படும் சிந்தாமணி, அப்படியேயான ஆற்றலுடையஐந்தருக்கள் — (ஆரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம்) சங்க, பதுமமென்ற இருநிதிகள், நல்ல மதிபோன்ற வெண் கொற்றக்குடை, நாதம்முதல் புவியீருன இடங்களும் பேறுகளும் — இவைபோன்றவைகளும் காசியில் உன் கடைக்கண் களிடும் பிச்சைதானென்று மகிழ்வு நிறை உன்னடியார் உவந்தேற்பார் அப்பிச்சையினை.

(கு — ரை) சிந்தாமணி — 'மின்மைசால் மணியிற் சிந்தாமணி வரம் விழுப்ப நல்கும்' (திருவிளை - மூர்த்தி — 10) அன்னபூரணியின் கடைக்கண்களிடும் பிச்சையே பிரமன் முதலிய தேவ பதவிகள் என்கிருர். (தொடரும்)

திருவாசகத்தின் சிறப்பு

திருவாசகம் — அழகிய வாசகம். வாசகம் என்பது மொழி. வீடுபேற்றை விரும்புவோரது உள்ளத்தைக் கவரும் பேரழகுடைய அருட்பாடல்களால் ஆகியநூல் என்பதுபொருள். திருவாசகம் படிப்பவர் மனத்தைப் பரவசப்படுத்தும். இந்நூலை ஒருமுறை ஓதினலும் உயிர் சிவத்தன்மை எய்தும், எளிய சொற்களால், உயர்ந்த பொருள்களால், நிறைந்த இசையால், எல்லோரையுந் தன்வயப்படுத்துந் தனிப்பெருந் தகவுடையது. வேதத்தினும் உயர்ந்தது. வேதத்தை மட்கலம் என்ருல், திருவாசகம் பொற்கலம் எனத்தக்கது என்று ஆன்ருேர் கூறுவர். திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார் என்பது உலகமொழி. மாணிக்கவாசக சுவாமிகள் காலம் கி. பி 3 ஆம் நூற்ருண்டென்று தமிழ்ப்பேரறிஞர்களான, சிவத்திரு மறைமலை அடிகள், திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை முதலியோர் கூறுவர். மூவர் காலத்திற்குப் பிந்தியவர் என்று கூறுவாரும் உளர். திருவாசகம் 8 ஆந் திருமுறையைச் சேர்ந்தது.

— சைவ போதினி (4).

கதிரவன் குடும்பம்

3. செவ்வாய்க் கிரகம்

செவ்வாய்க்கிரகம் (The Mars), கதிரவன் மண்டலத்தில் பூமிக்கு அடுத்த பிரகாரத்தில் உள்ளது. செவ்வாய்க்குக் குஜன் என்ற திருநாமமுண்டு – இதற்குப் பூமிக்கு முதல்வன் என்றுபொருள். செவ்வாய்க் கிரகம் சிவந்த நிறமுடையது – இதற்குச் சிவப்புதாரகை என்ற பெயருமுண்டு. மேனாட்டர் இக் கிரகத்திற்குப் போர்க்கடவுளின் பெயரைச் சூட்டியுள்ளனர். மார்ச் (March) என்ற மாதம் செவ்வாய்க்கு உரியது.

உருவத்தால் செவ்வாய் பூமியை விடச் சிறியதாகும். செவ்வாயின் குறுக்களவு சுமார் 4200 மைல்ஆகும். இதன் மேற் பரப்பளவு பூமியை நோக்க ஏழில் இரண்டுபங்கு. செவ்வாயின் கவர்ச்சி விசை (gravitation), பூமியின் கவர்ச்சி விசையில் மூன்றில்ஒருபங்கு. பூமியின்மீது ஒருமனிதன்எடை 150 பவுண்டு என்றால் செவ்வாய்கிரகத்தில் அவனது எடை 50 பவுண்டாக இருக்கும். பூமியின் மேல் 5 அடி உயரம் தாண்டும் ஒருவன் செவ்வாயின் மீது 15 அடிஉயரம்தாண்டுவான். செவ்வாய்க்கும் பூமிக்கும் உள்ள சராசரித் தொலைவு சுமார் 14, 15, 00, 000 (பதினான்குகோடியேபதினைந்து இலட்சம்) மைல்கள். செவ்வாய் பூமிக்கு சமீபத்தில் வரும்போது இதன் தூரம் சுமார் 3,50,00,000 (மூன்றுகோடியே ஐம்பது இலட்சம்) மைல்கள் இது பூமிக்கு எதிர்ப்புறம்இருக்கும்போது இதன்தூரம் 23,40,00,000 (இருபத்து மூன்று கோடியே நாற்பது இலட்சம்) மைல்கள் ஆகும் செவ் வாய்க்கிரகம் நம் பூமிக்கு அருகில் 15 அல்லது 16 ஆண்டுகட்கு ஒருமுறைதான் வருகிறது. அப்போது பூமி, செவ்வாய்க்கும் கதிரவனுக்கும் இடையில் வருகிறது. இந்நிலை செவ்வாய்க்கிரகத் தைப் பற்றிய ஆராய்ச்சிக்கு மிகவும் ஏற்றதாகும்.

செவ்வாய்க் கிரகத்தில் காற்றுமண்டலம் உண்டு – ஆனால் அஃது அவ்வளவு அடர்த்தியாக இல்லை. காற்று மண்டலத்தின் இடையே இதன் மேற்பரப்பைத் தெளிவாக நோக்கமுடியும். செவ்வாய்க்கிரகம் தன்னைத்தானே சுற்றிவரும் நேரம் 24 மணி 37 நிமிடம் 22.5 விநாடிகள் என வானசாத்திர நிபுணர்கள் கணித்துள்ளார்கள். இதுவே செவ்வாய்க் கிரகத்தில் ஒரு நாளாகும். செவ்வாய் பகலவனை ஒருமுறை முழுமையாகச்

சுற்றிவர 687 நாட்களாகின்றன. செவ்வாய்க் கிரகத்தில் ஓராண்டுக்கு 687 நாட்கள். செவ்வாய்க் கிரகமானது பகலவனைச் சுற்றி வரும் தளம் இதன் சுழற்சி இருசுக்கு (axis) நேர்க் குத்தாக இல்லை. இக்காரணத்தால் பூமியில் உள்ளதைப்போல் செவ்வாயிலும் பருவகாலங்கள் ஏற்படுகின்றன

செவ்வாய் மண்டலத்தின் மேற்பரப்புத்தோற்றம் தெள்ளத் தெளிந்ததாக இல்லை. இதனுடைய மேனி முழுதும் கருங்கோடுகள் எக்காலத்திலும் மறையாமல் தெரிகின்றன. இதன் சுழற்சி இருசின் இருமுனைகளிலும் வெண்ணிறம் காணப்படுகின்றன. இவ்வெண்ணிறப்பகுதிகள் மாரி காலத்தில் பெரியனவாகவும், வேனிற் காலத்தில் சற்றுச் சிறியனவாகவும் தென்படுகின்றன. செவ்வாயில் பச்சை நிறமாகச் சில இடங்கள் காணப்படுகின்றன. இவைகள் தாவரமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றன. இதில் சில பகுதிகளில் வரிவரியாகத் தோன்றுகின்றன. இவைகள் வாய்க்கால்களாக இருக்கலாம் எனவும் கருதப்படுகின்றன. பூமியை விடச் சற்று அதிகத்தொலைவில் இக்கோள் கதிரவனைச் சுற்றி வருவதால் இது பெறும் சூரிய வெப்பம் மிகவும்குறைவு. இக்கிரகத்தில் நடுப்பகலில் நடுப்பகுதிகளில் உள்ள வெப்பத்தின் அளவு 50° F. பூமியில் கோடைவாச ஸ்தலங்களில் இரவில் இருக்கும் வெப்பத்தின் அளவுதான் இது. இரவின் குளிர் இக்கிரகத்தில் கடுமையானது – 135° F என்று அறியப் படுகிறது. காற்றில் கலந்துள்ள உயிரியம் பாலைவனங்களிலுள்ள இரும்பு மூலத்துடன் அதிக அளவில் கலந்து துருவாக மாறிச் செந்நிறம் அடைந்துளது. இக்காரணத்தால் தான் இக்கிரகம் செந்நிறமாகத் தோன்றுகிறது. இம்மண்டலத்தில் அறிவு வளர்ச்சியின் உச்சியை எட்டியுள்ள மக்கள் சமூகம் வாழ்வதாகக் கருதப்படுகிறது. சில ஆண்டுகட்கு முன்னர், பூமியைநோக்கிப் பறக்கும் தட்டுகள் (Flying Sauser) வந்தன எனச் செய்தித் தாள்களில் வெளியாயிற்று அவைகள் செவ்வாய்க்கிரகத்திலிருந்து வந்திருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதினர்.

பூமிக்குச் சந்திரன் இருப்பதுபோல, செவ்வாய்க் கிரகத்திலும் இரு துணைக்கோள்கள் உள்ளன. இவை இரண்டும் இரவில் குளிர்ந்த ஒளி பரப்பியும், பகலில் இளவெய்யிலைப் பரப்பியும் திரிந்து வருகின்றன. இவ்விரு துணைக்கோள்களுக்கும் டைமாஸ் (Daimos) என்றும், ஃபோபஸ் (Phobos) என்றும் பெயர். இப்பெயர்கள் மார்ஸ் என்ற ரோமானியப் போர்க் கடவுளின் குதிரைகளின் பெயர்களே ஆகும் டைமாஸின் குறுக்களவு 10 மைல்கள். இது செவ்வாய்க் கிரகத்திற்குச் சுமார்

14, 000 மைல் தொலைவில் சுற்றுகின்றது. இஃது ஒருமுறை செவ்வாயைச் சுற்றிவர 30 மணி 18 நிமிடங்கள் ஆகின்றன. மற்றொன்றாகிய ஃபோபஸின் குறுக்களவு 36 மைல்கள். இது 7 மணி 39 நிமிடம் 23 விநாடிகளில் செவ்வாயை ஒருமுறை சுற்றி வருகிறது. செவ்வாய்க் கிரகம் ஒருமுறை தன்னைத்தானே சுற்றுவதற்குள் இத்துணைக்கோள் செவ்வாயை மூன்று முறை சுற்றி வந்து விடுகின்றது. இதைப்போன்ற பிறிதொரு நிகழ்ச்சி கதிரவன் மண்டலத்தில் காண இயலாது. செவ்வாயின் மத்திய கோட்டுப் பகுதிகளில் மக்கள் வாழ்கிறார்கள் என்று வைத்துக் கொண்டால், அவர்களுக்கு இத்துணைக்கோள்களால் ஒரே நாளில் மூன்று அல்லது நான்கு கிரகணங்கள் தோன்றக்கூடும். இவை சூரிய கிரணமாகவோ அல்லது துணைக்கோள்களின் கிரகணமாகவோ அமையக்கூடும்.

— தொகுத்தளித்தவர்: சுவாமி வீரபாகு.

ஆதாரம் :

A Short History of The Universe
By Arther S. Gregor (1964) Newyork.

கடவுள்

கடவுள் மேலானவர் ; அருவமும் உருவமும் அற்றவர். குணமுங் குறிகளும் இல்லாதவர்; மலத்திற் பொருந்தாதவர்; அழிவற்றவர்; உயிர்களது அறிவுக்கு அறிவாகி நிற்பவர்; சலனம் அற்றவர்; ஆனந்தமே வடிவானவர்; மாறுபட்ட உணர்வினரால் சென்று அடைய முடியாதவர்; தம்மை வழிபடுவோர்க்குச் சென்றடையும் முத்தி நிலையாய் உள்ளவர். அணுவுள் அணுவாகவும், பெரியனவற்றுள் பெரிதாகவும் விளங்குபவர். அறிவால் தெளிந்த பெரியோர் அவரைச் " சிவம் " என வழங்குவர்.

— சைவபோதினி - (8)

சிவபூசையின் சிறப்பு

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ..

வாழ்த்த வாயும், நினைக்கநெஞ்சும், வணங்கத்தலையும் தந்த தலைவனாகிய சிவபெருமானை நன்றியோடு மலர்தூவி வழிபடு தலைச் சிவபூசை எனக் கூறுகிறோம். பூஜா என்ற சொல்லுக்கு கன்மங்களைப் பூர்த்தி செய்து சிவஞானத்தை உண்டாக்குவது என்பது பொருள்.

பூஜா பலன் :

உலகில் செல்வமும் சீரும் பெற்றுள்ளவர்களைப் பார்த்து 'இவர்கள் முற்பிறவியில் நல்லபூ எடுத்துப் பூசித்தவர்கள்' என்றும், சுகபோகங்களை நுகர்பவரைப்பார்த்து 'அவர் செய்த பூஜாபலன்', என்றும் கூறக்கேட்கிறோம். இவற்றிலிருந்து சிவபூசை செய்தவர்கள் மறுமையில் நல்வாழ்வு பெறுவர் என்ற உண்மை புலப்படுகின்றதல்லவா ?

திருமால் முதலிய தேவர்கள் பலரும் பெருமானைப் பூசித்து நன்மைகள் பலவும் எய்தியதைப் புராணங்களில் பார்க்கிறோம். இந்திரனுக்கு விசுவாமித்திரர் அறிவுரை கூறும்வகையில்

"வண்டுளரும் தண்டுழாய் மாயோன் இறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தேள் இறுமாப்பும்
அண்டர்தொழ வாழுன் இறுமாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென்று உணர்த்திலையால்"

என்று சிவபூசையின் சிறப்பைக்கூறுகிறது திருவிளையாடற் புராணம். சிவபூசைசெய்து அதன் பெருமையை உலக மக்களுக்கு உணர்த்தியவர்களில் முதல் குருநாதராக அம்பிகை விளங்குவதைக் காண்கிறோம்.

முதற்குரு :

சிவபூசைசெய்தால் எல்லா நன்மைகளையும் எய்தலாம் என்பதைத் தேவர்மக்கள் முதலிய எல்லோருக்கும் உணர்த்தும் நிலையில் அம்பிகை காஞ்சிபுரத்தில் பெருமானைப் பூசித்துச் சிவபெருமானின் இடப்பாகத்தைத் தனக்கு உரிய இடமாகப் பெற்ருர்.

" எண்ணி லாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனஉரைத் தருள
அண்ணலார்தமை அர்ச்சனை செய்யஆ தரித்தாள்
பெண்ணின் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து "

தலபுராணங்களில் :

மனிதனின் கீழ்ப்பட்ட உயிரினங்களாகிய ஆனை, நண்டு, சிலந்தி, பாம்பு, குரங்கு, அணில், காகம் முதலிய உயிரினங்களும் சிவபிரானைப்பூசித்ததைத் தலவரலாறுகள் தெரிவிக்கின்றன. மக்கள் இத்தகைய சிவபூசையைச் செய்யாதுகாலம் கழிப்பதற்கிரங்கி அருணந்திசிவாசாரியார் இரங்கிப் பாடிய,

" மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்துமாகும் அரன்பணிக் காகவன்றே
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் தனையர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலும் மூடர்ஒன்றையும் உணரார் அந்தோ "

என்ற சிவஞானசித்தியார் பாடல் சிவபூசையின் சிறப்பை நன்கு எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

பூசை வகை :

மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களாலும் வழிபடப்பெறும் இத்தகைய சிவபூசை ஆன்மார்த்த பூசை பரார்த்த பூசைஎன இருவகைப்படும். ஆன்மார்த்தபூசை தன்பொருட்டுச் செய்யும் வழிபாடு. பரார்த்தபூசை பிறர் பொருட்டுச் செய்யும் வழிபாடு. இந்நூலில் கூறப்படும்விதிகள் ஆன்மார்த்த பூசைக்கு மட்டும் உரியனவாகும்.

ஆன்மார்த்த பூசைசெய்வோர், கொலை, களவு காமம், பொய், கள்ளுண்ணல் முதலிய குற்றங்களை ஒழித்து அன்பு, பக்தி, உண்மை, விபூதி, உருத்திராட்சதாரணம், தேவார திருவாசக பாராயணம் அடியார்த் தொண்டு சந்தியாவந்தனம் பஞ்சாட்சரசபம் முதலியவற்றையுடையவராய் விளங்கல் வேண்டும்.

ஆன்மார்த்த சிவபூஜை சுத்தம், கேவலம், மிச்சிரம் என மூவகைப்படும். சிவலிங்கத்தை மட்டும் பூசிப்பது சுத்தபூசை. சிவலிங்கம் உமை, கணபதி, முருகன், இடபதேவர் ஆகிய ஐவரையும் பூசிப்பது கேவலபூசை. இவர்களோடு சூரியன்,

சண்டேசுவரர் ஆகியவர்களையும் சேர்த்து எழுவரையும் பூசிப்பது மிச்சிரபூசை. ஆன்மார்த்த பூசையில் சௌராதிசண்டபரிய சாந்தமான பூசையே உத்தமபூசை எனப்படும்.

உடையவர் பூசை :

ஆன்மார்த்த பூசையில் இட்டலிங்கபூசை அல்லது உடையவர்பூசை எனப்படுவது குருமுகமாக சிவலிங்கத் திருவுருவை விரும்பிப்பெற்றுப் பூசிப்பதாகும்.

இஷ்டலிங்கங்கள் பொன், தாமிரம், வெள்ளி, வெண்கலம், பித்தளை, இரும்பு ஆகிய உலோகங்களாலும் படிகம், மரகதம், முத்து, பவழம்முதலிய மணிகளாலும், கருங்கல்லாலும் இயன்றனவாகும். இயற்கையாக நருமதை முதலியநதிகளில் உருண்டு சிவலிங்கவடிவம் பெற்றுவரும் வாணலிங்கமும் பூசித்தற்குரியதாகும்.

இஷ்டலிங்கங்களில் பொன் போகமோக்ஷத்தையும் தாமிரம் புத்திர விருத்தியையும், வெள்ளி செல்வத்தையும் வெண்கலம் சுகத்தையும், பித்தளை நோய் நீக்கத்தையும் இரும்பு சத்ரு ஜெயத்தையும் தருவனவாம்.

இரத்தினங்களில் மரகதம் புஷ்டியையும், பத்மராகம் செல்வத்தையும், வைடூரியம் ஆயுள் விருத்தியையும், படிகம் புத்திரவிருத்தியையும், புஷ்பராகம் சத்துரு ஜெயத்தையும், பவளம் இராஜவசியத்தையும், வைரம் ஆகர்ஷணத்தையும், மாணிக்கம் உலகசித்தியையும், இந்திரநீலம் மோக்ஷத்தையும் தருவனவாம்.

க்ஷணிக லிங்க பூசை :

இட்டலிங்கபூசைசெய்ய இயலாதவர்கள் க்ஷணிகலிங்க பூசை செய்யலாம். க்ஷணிகலிங்கம் என்பதற்கு, பூசித்தவுடன் விடப்படும் லிங்கம் என்பதுபொருள். க்ஷணிகலிங்கம் - புற்றுமண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்கம், சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, சர்க்கரை, மா எனப் பன்னிரு வகைகளில் ஒன்றாகும்.

க்ஷணிகலிங்கங்களில் புற்றுமண் மோக்ஷத்தையும், அரிசி பொருள்வருவாயையும், அன்னம் அன்னவிருத்தியையும், ஆற்றுமணல் பூமிலாபத்தையும், கோமயம் வியாதி இன்மையையும்,

வெண்ணெய் மனமகிழ்ச்சியையும், உருத்திராக்கம் ஞானவிருத்தியையும், சந்தனம் சகல இன்பங்களையும், கூர்ச்சம் முத்தியையும், புஷ்பம் ஆயுள் விருத்தியையும், சர்க்கரை விரும்பிய இன்பங்களையும், மா சரீரவன்மையையும் தருவனவாம்.

சிவபூசை செய்வோர்க்கு விபூதி உருத்திராக்கம் ஆகியன இன்றியமையாத சிவசின்னங்களாகும். இவற்றை அணியாமல் செய்வோர் பூசைப் பயனைப்பெருர்.

ஆன்மார்த்த பூசைசெய்வோர் தம் இல்லங்களிலோ அன்றிச் சிவாலயம், திருமடம், பூந்தோட்டம், புண்ணிய நதிக்கரை, சுத்தமான பிறர் இல்லங்கள் ஆகியவற்றிலோ பூசைசெய்யலாம்.

ஆசனம் :

புலித்தோல், மான்தோல், வெள்ளைக்கம்பளம், தருப்பை, வெள்ளைவஸதிரம், மரப்பலகை முதலிய ஆசனங்களில் அமர்ந்து பூசை செய்தல் வேண்டும். மண், கல் தழை மூங்கில், கோரை, தாழை, பனை, பஞ்சு ஆகியவற்றில் அமர்ந்து செய்தல் கூடாது. ஆசனங்களில் புலித்தோல் முத்தியையும், மான்தோல் ஞானசித்தியையும், கம்பளம் துக்க நிவர்த்தியையும், தர்ப்பை கீர்த்தியையும் வெள்ளாடை வியாதி நீக்கத்தையும் மரப்பலகை சம்பத்தையும் தரும்.

தீட்சை இல்லாதவர், நித்யகருமம் விடுத்தவர், ஸ்நானம் செய்யாதவர், ஆசௌசம் உடையவர் முதலியோர் அல்லாதவர் எடுத்த பத்திரபுஷ்பங்களே பூசைக்கும் உரியனவாம்.

ஈரவஸ்திரம், ஈரக்கௌபீனம் அணிந்து பூசைசெய்யலாகாது. கௌபீனம் மட்டும் அணிந்தோ, கௌபீனம் இன்றி ஆடைமட்டும் அணிந்தோ பூசைசெய்தல் கூடாது.

வியாதி முதலியவற்ருல் ஒருநாள் பூசை செய்யத்தவறியவர் அகோரமந்திரத்தை முந்நூறு உருச்செபித்து மறுநாள் பூசை செய்யலாம். பதினைந்து நாட்களுக்கு மேல் பூசை தவறியவர் ஆசாரியரிடம் பரிகாரம் செய்து கொண்டு மீண்டும் பூசை செய்தல் வேண்டும்.

சிவபூசை செய்யாது அன்னபானம் முதலிய அருந்துதல் கூடாது. சிவபூசை செய்யும் அன்பர்கள் இவ்விதிகளை அறிந்து சிவபூசை செய்து அதனுல் விளையும் நற்பயன்களைப் பெறுவார்களாக.

பெரியபுராணம்
பன்னிரண்டாம் திருமுறை

குடந்தை திரு. N. சேதுராமன் B. SC., D. M. I. T,
Director, Raman & Raman Private Limited

செயங்கொண்ட சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழ வளநாட்டுப் புலியூர்கோட்டத்துக் குன்றத்தூர் நாட்டுக்குன்றத்தூரில் அவதரித்தவர் சேக்கிழார் பெருமான். சேக்கிழார் "திருத்தொண்டர் மாக்காதை" என்னும் பெரிய புராணத்தை அருளிச்செய்தனர். பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவகுக்கப்பட்டது பெரியபுராணம் இயற்றப்பட்டகாலத்தை அறிவதற்கு முன் சரித்திர நிகழ்ச்சிகளையும் இங்குக் குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது 1.

விக்கிரம சோழன் கி. பி. 1118-இல் சிம்மாதனம் ஏறினன். 1133 - இல் தனது மகன் இரண்டாம் குலோத்துங்கனுக்கு முடி சூட்டினன். விக்கிரமன் 1135-இல் மறைந்தான். குலோத்துங்கன் சோழமாமன்னன் ஆனன். தனது மகன் இராசராசனுக்கு 1146-இல் முடிசூட்டினன். குலோத்துங்கன் 1150 - இல் மறைந்தான். இராசராசன் சோழமாமன்னன் ஆனன். 1166 - இல் இராசராசன் நோய்வாய்ப் பட்டான். அவனது இரு புதல்வர்களும் சிறுவர்களாக இருந்தனர். எனவே இராசராசனுக்குக் கவலை ஏற்பட்டது. தான் இறந்துவிட்டால் சோழ இராச்சியத்தை யார் ஆட்சிபுரிவது என்று கவலையுற்ருன். தனது அமைச்சன் திருச்சிற்றம்பலமுடையான் ஆன பெருமான் நம்பிப்பல்லவரையனைக் கலந்து ஆலோசித்தான். அமைச்சனின் ஆலோசனைப்படி - இராசராசன் தனது சகோதரியான நெறியுடைப் பெருமாவின் மகன் எதிரிலிப் பெருமாளுக்கு முடிசூட்டினன். எதிரிலிப் பெருமாள் கி. பி. 1166 - இல் ஆனி மாதத்தில் இராசாதிராச சோழன் என்று திரு அபிஷேகம் செய்யப்பட்டான்.

A. R. E. = Archaeological Report on Epigraphy

S. I. I. = South Indian Inscriptions Volumes.

1. N. Sethuraman - Aruludai Cholamandalam edition 1976 - The Cholas Mathematics Reconstructs the Chronology - edition 1977 - Medieval Pandyas edition 1980.

இராசராசன் இறந்துவிட்டால், இராசாதிராசனேதொடர்ந்து சோழ நாட்டை ஆளவேண்டுமென்றும், உரிய நேரம் வந்த வுடன் இராசராசனின் மக்கள் இருவரில் ஒருவனுக்கு இராசாதி ராசன் முடிசூட்டி அம்மகனிடமே சோழராச்சிய பரிபாலனத்தை ஒப்படைக்க வேண்டுமென்றும் நிபந்தனையிடப்பட்டது. அவ் விதமே செய்வதாக இராசாதிராசனும் தன் மாமன் இராசராச னிடம் வாக்கு அளித்தான்.

கி. பி. 1173-இல் இராசராசன் மறைந்தான். இராசாதிராசன் சோழ மாமன்னன் ஆனான். தனது மாமனை இராசராசனின் இரு அரச குமாரர்களுக்கும் பாதுகாவலனாக விளங்கினான். கி. பி. 1178-ஆடி மாதத்தில இராசராசனின் இரண்டாம் மகனான மூன்றாம் குலோத்துங்கனுக்கு, இராசாதிராசன் முடிசூட்டினான். இராசராசனின் மூத்தமகன் "மொழியனைத்தும் வல்லவன்; ஆதி மனுவிற்கும் மேதக்க நல்லமன் என்னும் நாயகன் ஆவான் 2." அவன் அரச போகத்தை நாடாமல் இருந்ததால், அவனது தம்பியான குலோத்துங்கனுக்கு முடிசூட்டப்பட்டது.

1178-இலிருந்து 1180-வரை அத்தை மகனான இராசாதிராச னும், மாமன் மகனான மூன்றாம் குலோத்துங்கனும் இணைந்து அரசு புரிந்தனர் 3. 1180-இல் இராசாதிராசன் சோழராச்சிய பரிபாலனத்தைக் குலோத்துங்கனிடம் ஒப்படைத்தான். காலஞ் சென்ற தனது மாமன் இராசராசனுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி நன்றிக்கடன் ஆற்றினான். 1181-இல் ஆந்திரம் சென்று - நிலையாக அங்குத்தங்கி கி. பி. 1215- இல் மறைந்தான். மூன்றாம் குலோத்துங்கனும் இராசாதிராசனுக்குத் தனது நன்றி யைத் தெரிவிக்கும் வகையில் இராசாதிராசனின் மெய்க்கீர்த்தி யைத்தனது கல்வெட்டுக்கள் சிலவற்றில் ஏற்றான். சோழநாடும் தன் நன்றியை வெளிப்படுத்தியது. இந்நன்றிக்கடனின் எதிரொலி யே "சங்கரசோழன் உலா" என்னும் உலாவாகும். இதன்பாட்டு டைத் தலைவன் இராசாதிராசனே. நிற்க - இச்சரித்திர நிகழ்ச்சி களில் நாம் கவனிக்க வேண்டிய செய்திகள் மூன்று; அவை:

---

2. Sankara Cholan Ula – N. Sethuraman – The Cholas Mathematics Reconstructs the Chronology Pages 136 to 140 – Madieval Pandyas pages 40 to 42–

3. Tiruchattimutram record A. R. E. 270/1927 of Rajadhi Raja quotes the reign of Kulothunga III.

1 இரண்டாம் குலோத்துங்கன் 1133 முதல் 1150 வரை ஆட்சி புரிந்தான்.

2 இரண்டாம்குலோத்துங்கனின்மகனேஇராசராசன் ஆவான். இராசராசனின் இரண்டாம் மகன் மூன்றும் குலோத்துங்கனுவான்.

3 மூன்றும் குலோத்துங்கன் 1178- இல் முடிசூட்டப்பட்டான். அத்தைமகனை இராசாதிராசனும் மாமன்மகனை குலோத்துங்கனும் 1178 முதல் 1180-வரை இரண்டு ஆண்டுகள் இணைந்து ஆண்டனர்.

பெரியபுராணம் இயற்றப்பட்ட காலத்தைப்பலர் ஆராய்ச்சி செய்து உள்ளனர். சிலர் இரண்டாம் குலோத்துங்கன் காலம் எனவும், வேறுசிலர் மூன்றும் குலோத்துங்கன் காலம் எனவும் கொள்வர். இப்பிரச்சனைக்கு இங்கு முடிவுகட்டிவிடவேண்டும்.

பெரியபுராணம் எழுதப்பட்ட காலத்தில் ஆட்சி புரிந்த சோழ மன்னனை அநபாயன் என்றும், குலோத்துங்கன் என்றும்' அவன் தில்லைப் பேரம்பலம் பொன் வேய்ந்தவன் என்றும் சேக்கிழார் கூறுவார். பெரியபுராணம் எழுதப்பட்டபிறகு மன்னனும் மகிழ்ந்து – சேக்கிழாரையே அதற்கு விரிவுரை கூறச் சொன்னுன். மன்னனின் விருப்பப்படி சேக்கிழாரும் ஓர் ஆண்டில் 4253 – பாடல்களுக்கு விரிவுரை கூறினர். மன்னனும் மகிழ்ந்து சேக்கிழாருக்கு உத்தமசோழ பல்லவராயன் என்னும் பட்டம் அளித்தான். பொன்னும் பொருளும் வாரி வழங்கினன். தில்லையில் பெருவிழா எடுத்தான். சேக்கிழார் பெருமானும் மன்னன் அளித்த பொருளைக்கொண்டு "குன்றத்தூரில் திருநாகேஸ்வரம்" என்னும் கோயிலைக் கட்டினர். இச்செய்திகளை உமாபதிசிவம் சேக்கிழார்நாயனர்புராணத்தில்எடுத்துரைப்பார்.

எனவே சேக்கிழாரின் காலத்தையும், பெரியபுராணம் இயற்றப்பட்ட காலத்தையும் நிர்ணயிக்க சேக்கிழார் கட்டிய திருநாகேஸ்வரம் கோயில் கல்வெட்டுக்களே தக்க சான்றுகளைக் கூறமுடியும். அவைகளைக் காண்போம். (குன்றத்தூர் சென்னைக்கு மேற்கில் உள்ளது).

குன்றத்தூர் திருநாகேஸ்வரம் கோயில் கர்ப்பக்கிரகத்தில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளில் மூன்றும் குலோத்துங்க சோழனின் 2-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இதில் கோயிலுக்குச் சில நிலங்களை நிவந்தமாகக்

கொடுக்கப்பட்டது சொல்லப்படுகிறது 4. குலோத்துங்கன் முடிசூடியது கி. பி. 1178–ஆடிமாதம் ஆகும். எனவே இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1179–ஆடி மாதம் முதல் 1180–ஆடிமாதம் வரையிலான இடைப்பட்ட காலமாகும். இந்தக் காலப்பகுதியான இவனது இரண்டாம் ஆண்டிற்குள் 4253 பாடல்களுடன் கூடியபெரியபுராணம் இயற்றப்பட்டு, விரிவுரை ஒருவருடத்தில் கூறப்பட்டு, பிறகு கற்கோயிலும் கட்டப்பட்டு இருக்க முடியாது. மூன்றும் குலோத்துங்கன் தனது இரண்டாம் ஆண்டிற்குள் தில்லைப் பேரம்பலம் பொன் வேய்ந்ததாகவோ, அநபாயன் என்ற பெயர் கொண்டதாகவோ வரலாறே இல்லை. மேலும் 1179–80 ஆகிய காலங்களில் இராசாதிராசனே சோழப் பேரரசன். குலோத்துங்கன் இளவரசனே. ஆனல் சேக்கிழார், பெரியபுராணத்தில் அரசவை குறிப்பிடும்போது தனது மன்னனாகிய குலோத்துங்கனைத் தனிமன்னனாகச்சோழப்பேரரசனாகவே குறிப்பிடுவார். எனவே மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் பெரியபுராணம் இயற்றப்பட்டது என்று கொள்வதற்கு இல்லை· மாருக மூன்றும் குலோத்துங்கன் முடிசூடுவதற்கு முன்பே திருநாகேஸ்வரம் கோயில் இருந்திருக்கிறது என்ற உண்மையை இக்கல்வெட்டின் காலம் தெளிவாக உணர்த்துகிறது.

இக்கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் உள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் பழையவை இண்டாம் குலோத்துங்க சோழனுடையவை. இவைகளைப் பலமுறை நேரில் சென்று படித்துள்ளேன். இரண்டு கல்வெட்டுக்கள் மன்னனின் 14–ஆம் ஆட்சி ஆண்டில் செதுக்கப்பட்டவை 5. இவைகளின் காலம் 1146-47 ஆகும். இவைகளில் கம்பவன நாச்சியார் அம்மன் எழுந்தருளிவிக்கப்பட்டதும், வழிபாட்டுக்கு நிலங்கள் நிவந்தங்களாக அளிக்கப்பட்டதும் சொல்லப்பட்டுள்ளன. மற்ருெருகல்வெட்டு மன்னனின் 16–ஆம் ஆட்சி ஆண்டு 1148–49க்கு உரியது 6. கோயிலுக்கு அளித்த நில நிவந்தங்களைக் கூறுகிறது.

அம்மன் கோயிலில் மூன்றும் குலோத்துங்கனின் 4–ஆம், 6–ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன 7. இவைகளின் காலம் முறையே 1182, 1184 ஆகும். இரண்டாம் குலோத்

---

4 A. R. E. 200/19 9–30.

5. A. R. E. 194 and 198 of 1929–30

6. A. R. E. 199/1929–30.

7. A. R. E 230 and 229 of 1929–30.

துங்கனின் காலத்து 14-ஆம் ஆட்சி ஆண்டில் அன்னை எழுந்தருளிவிக்கப்பட்டாள். அம்மன் கோயிலில் முன்னும் குலோத்துங்கனின் 4-ஆம், 6-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக்கள் இருப்பது பொருத்தமே.

எனவே இக்கோயில் 1146-க்கு முன்பே - அதாவது 1145-இல் முழுதும் கட்டி முடிக்கப்பட்டது எனக்கொள்ளலாம். இது இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சிக்காலமாதலால் - சேக்கிழார் அம்மன்னனின் காலத்தில் வாழ்ந்தவர் என்பது தேற்றம். பின்வரும் செய்திகளும் துணைபுரியும்.

பெரியபுராணம் எழுதப்பட்ட காலம் :

விக்கிரம சோழன் 1118 - இல் சிம்மாதனம் ஏறினன். கி பி. 1133 - இல் தனது மகன் இரண்டாம் குலோத்துங்கனுக்கு முடி சூட்டினன். தனது 17-ஆவது ஆட்சி ஆண்டில், கி. பி. 1135 இல் விக்கிரம சோழன் மறைந்தான். 1135 - லிருந்து குலோத்துங்கன் சோழப்பேரரசன் ஆனன். இவ்வாண்டிலிருந்து மன்னனின் தனிப்பட்ட ஆட்சி துவங்குகிறது. அப்போது மன்னனின் முதல் அமைச்சராகப் பணிபுரிந்தவர் குன்றத்தூர் சேக்கிழார் பெருமான் ஆவர். சேக்கிழார் பெரியபுராணம் இயற்றுவதற்குக் காரணம் என்ன? எந்த சூழ்நிலையில் இயற்றினர்? எப்போது இவ்வரும் பணியைமேற்கொண்டு செவ்வனே செய்துமுடித்தார்? இவ்வினுக்களுக்கு உரிய விடைகளைப் பெரியபுராணத்திலும் உமாபதி சிவத்தின் சேக்கிழார் நாயனர் புராணத்திலும் குலோத்துங்கனின் கல்வெட்டுக்களிலும் காணலாம். அவைகளைப் பார்ப்போம்.

பெரியபுராணம் :

பெரியபுராணத்தில் சேக்கிழார்பெருமான் சோழ மன்னனைக் குறிப்பிடுகின்றர். பெரியபுராணம் பாயிரத்தில் சேக்கிழார் சோழ மன்னனின் அரசவையைக் குறிப்பிடும்போது "திருப்போம்பலம் செய்ய தூய பொன் அணி சோழன் நீடுழி பார் ஆய சீர் அநபாயன் அரசவை" என்பார். தில்லை நடராசப்பெருமானின் திருப்பேரம்பலம் பொன் வேய்ந்தவன் இரண்டாம் குலோத்துங்கன். இவனுக்கு அநபாயன் என்ற பெயரும் உண்டு. இவைகளைக் கல்வெட்டுச்சான்றுகளுடன்பின்னல் பார்ப்போம். சண்டேசர் புராணம் எட்டாம் பாட்டில் "சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத் திரு எல்லை பொன்னின் மயமாக்கியவளவர் ... ... புவிகாக்கும் மன்னர் பெருமான்

அநபாயன்" என்றும் விளக்குவார். புவிகாக்கும் மன்னர் பெருமான் என்று நிகழ் காலத்தில் கூறியதையும் கவனிக்க வேண்டும். இதனால் திருப்பேரம்பலம் பொன் வேய்ந்த அநபாயன் என்னும் குலோத்துங்க சோழனே சேக்கிழார் காலத்துச் சோழ மன்னன் என்பதை அறியலாம்.

உமாபதி சிவம் :

உமாபதி சிவம் பதின்மூன்றும் நூற்றாண்டுப்பிற்பகுதியில் வாழ்ந்தவர். அவர் சேக்கிழார் நாயனார் புராணம் இயற்றியவர். அதில் அவர் கூறுவதாவது :

" நற்குடி நாற்பத்து எண்ணாயிரவர் சைவப்பெருங்குடியில் சேக்கிழான் என்னும் வேளாளர்குடியில் பிறந்தவர் சேக்கிழார். அவருக்கு அருண்மொழித்தேவர் என்ற இயற்பெயரும் உண்டு. அவர் சோழ மன்னனிடம் அமைச்சராகப் பணிபுரிந்தவர்.

மன்னன் இளமைக் காலத்தில் சிற்றின்ப இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டிருந்தான். சேக்கிழார் மன்னனுக்குத் திருத்தொண்டர் பெருமையை எடுத்து உரைத்தார். சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் அடியார் பெருமையை எடுத்து ஓதியவர். நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டத் தொகையினை விரிவுபடுத்திக்கலித்துறை அந்தாதி செய்தார். அதில் கூறப்பட்டுள்ள அடியவர்கள் பெருமை அறிதலே பயன் தரும் என்று மன்னனிடம் சேக்கிழார் கூறினார் சோழனும் மகிழ்ந்து

ஆயமறை மொழி நம்பியாண்டார் நம்பி
அருள் செய்த கலித்துறை அந்தாதி தன்னைச்
சேய திருமுறைகண்ட ராசராச தேவர்
சிவாலய தேவர் முதலா யுள்ள ...."

பலரும் உலகத்தாரும் பாராட்டிய தூய கதையைச் சேக்கிழாரே விரிவாக அடைவுபடச்சொல்ல வேண்டுமென்று வேண்டினான் 8. மன்னனின் வேண்டுகோளின்படி சேக்கிழாரும் அறுபத்துமூவர் வரலாற்றை எழுத முற்பட்டார். சேக்கிழார் பெருமானும் அடியார் பெருமையைக் கூறும் திருத்தொண்டர் மாக்கதை எழுதத் தொடங்கினார். அவ்வப்போது மன்னனும் தூதுவர்களை அனுப்பி, "கதை எந்த அளவுக்கு முடிந்தது" என்று விசாரித்து வந்தனன். நல்லதோர் நாளில் சேக்கிழார் பெருமானும் 4253 பாட்டுக்களை உடைய பெரியபுராணத்தை எழுதி முடித்தார்.

---

8. சேக்கிழார் நாயனார் புராணம் பாடல் 24.

மன்னனும் மகிழ்ந்தான். சேக்கிழாரே அக்கதைக்கு விரிவுரை செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டனன். மன்னனின் வேண்டுகோளின்படி சித்திரைத்திங்கள் திருவாதிரை நாளில் சேக்கிழார் பெரியபுராண விரிவுரையைத்தொடங்கினர். 4253 பாடல்களுக்கு விரிவுரை வழங்க ஓராண்டு ஆயிற்று மறு ஆண்டு சித்திரைத் திங்கள் திருவாதிரை நாளில் விரிவுரை பூர்த்தி ஆயிற்று 9. சேக்கிழாரைச்சோழன் பெருமைப் படுத்தினன். யானையின்மீது சேக்கிழாரை அமரச்செய்து நகர்வலம் வந்தான். சோழ மன்னன் சேக்கிழாருக்குக்கவரி வீசினன். திருத்தொண்டர் மாக்காதை என்னும் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் செய்யப்பட்டது மன்னனும் தனது பெயரால் சேக்கிழாருக்கு உத்தமசோழப் பல்லவரையன் என்ற பட்டம் அளித்தனன். சேக்கிழாரின் தம்பி பாலறுவாயருக்கு அமைச்சர் பதவியும் அளித்துத்தொண்டைமான் என்ற சிறப்புப் பெயரையும் அளித்தனன். சேக்கிழாருக்குப்பொன்னும் பொருளும் வாரி வழங்கினன். மன்னன் அளித்த பொருளைக்கொண்டு சேக்கிழார் பெருமான் குன்றத்தூரில் திருநாகேஸ்வரம் என்ற கோயிலைக் கட்டினர். (தொடரும்)

9. சேக்கிழார் நாயனர் புராணம் பாடல் 80.

கடிதம் :

லண்டன் சைவ சித்தாந்த நிலையம்
சர்வோதய சேவாச்சிரமம்

தலைவர் :

"சைவத்தமிழ்மணி"	சிறப்பாசிரியர்
கிருஸ்ண ஞானசூரியன்	"லண்டன் முரசு"

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்கு :

பேரன்பு மிக்க திருப்பெருந்திரு சுவாமிகள் அவர்கட்கு லண்டன் வாழ் 30,000 சைவத்தமிழர் சார்பிலும், அடியேன் சார்பிலும் வணக்கம் "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

முதலாவது உலக சைவசித்தாந்தக் கருத்தரங்கை முன்னின்று நடத்தியருளியமைக்குக் குருமகாசந்நிதானம் அவர்களைச் சைவத்தமிழ் உலகம் நன்றியறிதலுடன் போற்றுகின்றது; பாராட்டுகின்றது... ....

குலச்சிறை நாயனர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ.

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 6—1—1985 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தை யொட்டி எழுதப் பெற்ற கட்டுரை.]

அன்று மார்கழித் திருவாதிரை ஆருத்ராதரிசனம். முதல் ஞாயிறும் கூடுகிறது!

இறைவன் அன்று மக்களுக்குத் தாமே எழுந்தருளிக்காட்சி தந்தசோடு குருமணிகளின் திருவார்த்தைகள் வாயிலாகவும் அருள்பொழிந்தான்.

காலையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் சிதம்பரம் ஆருத்ரா தரிசனத்துக்கு எழுந்தருளியிருந்தார்கள். ஆதலால் வழக்கமாகக் காலையில் நடைபெறும் அருளுபதேசம் அன்று மாலை 7 மணிக்கு நிகழ்ந்தது. அன்பர்கள் திருநீறு பெற்று அமர்ந்தார்கள் தேவார இன்னிசையும் நிகழ்ந்து நிறைந்தது.

குருமணிகள் அருளுபதேசம் தொடங்குகின்ருர்கள். அவர்கள், 'சிரணியும்' என்னும் குருஸ்தோத்திரம் ஓதி 'உலகெலாம்' எனும் கடவுள் வாழ்த்துப்பாடலை ஓதி உபதேசம் தொடங்குதலை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள் – இனிய இசை மனத்தை ஒருமுகப்படுத்தியது!

இம்மாதம் குலச்சிறைநாயனர் புராணச்சிந்தனை. ஒவ்வொரு மாதமும் தொடக்கத்தில் அந்த மாதத்தின் சிறப்பை அருள்வார்கள். உலகியல் - சமயம் – சமுதாயம் என்னும் நோக்கோடு இணைந்து எளிய சொற்களால் இனிமையாக உபதேசிப்பது அவர்கள் வழக்கம். குருமணிகள் மார்கழிமாதத் தின் சிறப்பையும் அன்றைய விழாவான ஆருத்ரா தரிசனப் பலனையும் அருளி நம்மை வழிபடுத்தியருளினர்கள்.

குருமணிகள் உபதேசிக்கின்ருர்கள்: " இந்நாள் இறைவனை வழிபடவேண்டிய முக்கியமான நாள்: ஆருத்ராதரிசனம் "

" குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயில் குமிழ்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல்மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே."

என்று அப்பர்சுவாமிகள் அருளிச்செய்துள்ளார். இறைவனைத் தரிசிக்க மனித்தப் பிறவியை வேண்டுகிறார். திருமூலதேவரும்,

" பெறுதற்கு அரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கு அரிய பிரானடி பேணார்
பெறுதற்கு அரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற்கு அரியதோர் பேரிழந்தாரே "

என்கிறார்.

இறைவனைத் தரிசிக்கப் பெற்றால் பிறவிவேண்டும் என்பதைக் 'காணப்பெற்றால் மனிதப்பிறவியும் வேண்டுவதே' என்ற தொடர் விளக்குகின்றது. 'காணப்பெற்றால்' என்ற தொடர் மிகவும் கவனிக்க வேண்டிய தொடர்.

குருமணிகள் மேலும் விளக்கித்தொடர்பான கருத்துக்களையும் அருள்கிறார்கள். " திருவாரூர் பிறக்க முத்தித்தருவது. காசி இறக்க முத்திதருவது. அண்ணாமலை நினைக்க முத்திதருவது" தொடர்ந்து மார்கழிமாத வழிபாடுபற்றி அருள்கிறார்கள்.

மார்கழி மாதத்தில் விடியற் காலையில் தரிசனம் செய்ய வேண்டும். காலை மாலை இருவேளைகளிலும் இறைவனை வணங்க வேண்டும் என்று நம்முன்னோர் வகுத்துள்ளனர்.

குருமணிகள் தெளிவு படுத்துகின்றார்கள்; "தொடக்ககாலத்திலும் கடைசிகாலத்திலும் மனிதன் நல்லவனாக உள்ளான், நடுவில் மாறிவிடுகிறான் – காலைநேரம், இளமை. மாலைநேரம் முதுமை."

மார்கழியில் வைகறையில் எழுந்து வழிபாடு செய்ய வேண்டும் என்பது நியதி. ஒருவரும் இதனைச் சரிவரச் செய்வதில்லை. மேலும் ஒரு குறிப்பை விளக்கினார்கள். மணிவாசகர் காலக்கணக்கிலும் இடக்கணக்கிலும் இறையருள் பற்றிச்சிந்திக்கிறார். " முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே ! பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே " எனக் காலக்கணக்கிலும், " பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாத மலர் " என இடம் என்ற நிலையிலும் எண்ணிப்பார்க்கிறார்.

ஒருநாள் என்பது இருதன்மைகளையுடையது. ஒன்று ஒளியும் வெப்பமும் கூடிய பகல். மற்றது இருளும் தட்பமும் உடையஇரவு. குருநாதர் இங்ஙனம் இரண்டிரண்டாய்விளங்கும் நிலையில் பலவற்றைவிளக்கி நிறைந்த நிலையாக இறையருளைக் காட்டுகின்றார்கள்.

"ஒருநாள் இரண்டாக விளங்குதல் போலவே மாதமும் கிருஷ்ணபட்சம் - சுக்கிலபட்சம் என இரண்டாகிறது. தட்சிணயனம், உத்தராயணம என இருநிலையுடையது ஓர் ஆண்டு. உத்தராயணம் பகல் அதிகம் உடையது." தட்சிணயணம் அம்மை வடிவம். உத்தராயணம் அப்பன்வடிவம்.

அடுத்து இடம்என்ற நிலையைப்பலகோணங்களில் சிந்தித்து உபதேசித்தார்கள். "வாமம் என்பது இடப்பகுதி. குறைவு, தாழ்ந்தது என்பது அச்சொல்லின் பொருள். "வாமதேவாயை நம:" என அஷ்டோத்திரத்தில் தொடர் உண்டு. வழக்காற்றிலும் வலம், இடம் பேசப்படுகின்றது. வலம்சற்று வலிமையுடையது. இடம் சற்று மென்மை மிகுந்தது. வலம் - சிவம்; இடம் - சக்தி.

குருமணிகள் மார்கழி வழிபாடுபற்றி விளக்கம் தந்தருளினார்கள்.

"மார்கழியில் இருள் நீங்கித் தையில்நல்ல ஒளிவரும். வாழ்வு சுபிட்சம் அடையும். மார்கழி விடியலில் நல்ல குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும்" - இங்ஙனம் ஆசீர்வதித்த குருமணிகள் தண்ணீரில் குளித்தல் நன்மை தருவது என்பதைச் சமய நோக்கிலும் அறிவியல் நுட்பத்தோடும் புலப்படுத்தினார்கள்.

"குளிர்ந்தநீரில் குளித்தால் உடலுக்கு மிகவும் நல்லது, அதுவும் ஓடும் நீரில் குளிப்பது சிறப்பு. குளித்தால் பின்பு குளிர் வாட்டும். நீராடியபின் வழிபடுவது என்பது மன ஒருமைக்கு வழிகோலுவது. நீராடலும் வழிபாடும் உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைக்க உதவுவன.

தண்ணீர் அமுதம். திருவள்ளுவர் "வானின் றுலகம் வழங்கி வருதலால் தானமிழ்தம் என்றுணரற் பாற்று" என இதனைக் குறிக்கின்றார். அபிஷேகத்தில் தண்ணீர் விசேஷமானது. 'அமிர்தாபிஷேகம்' என இதனைக் கூறுவர். சுத்த ஜலமே அமிர்தம் எனப்படும். சுவாமி அபிஷேகத்துக்கு என்றே தனிக் கிணறு இருக்கும். திருக்கடவூரில் சங்காபிஷேகம் விசேஷம்.

அபிஷேக தீர்த்தத்தில் 250 க்கும் மேற்பட்ட திரவியங்கள் சேர்த்துச் சங்காபிஷேகம் நடைபெறுகிறது. இத்தீர்த்தம் மகோதரம் முதலிய பிணிகளை நீக்கவல்லது. சரபோஜி வம்சத்தார் இத்தகைய தீர்த்தம் பயன்படுத்திப் பயன்பெற்றனர் என்றும் வரலாறு கூறுகின்றது ''

தண்ணீருக்கு ஆற்றல் அதிகம். மின்னாற்றல் பெற்றது தண்ணீர். சுகாதாரமுறையில் உள்ள நீர், நோய்களை நீக்கும். முதலுதவியாகத் தண்ணீர் பயன்படும். வெட்டுக் காயத்திற்கு ஈரத்துணியால் கட்டும் வழக்கம் இன்றும் உள்ளது. விஷம் தீண்டிய பின் தண்ணீரில் இருந்தால் விஷம் குறையும்.

இங்ஙனம் வாழ்வியல், சமூக அறிவியல் நோக்குடன் பல கருத்துக்களைத் தெளிவுடன் அருளிய குருமணிகள் மார்கழி மாதம் பாராயணம் செய்ய வேண்டிய திருவெம்பாவை, திருப்பாவை, திருப்பள்ளி எழுச்சி பற்றி நற்சிந்தனைகளை வழங்கினார்கள்.

திருவெம்பாவையில் 8பாடல்கள் துயில் எழுப்பும் நிலையில் பாடப்பெற்றுள்ளன. திருப்பள்ளி எழுச்சி முழுமையும் அப்படி அமைந்துள்ளது. இறைவனைக் கண்டதாகக் கூறும் முறை அமைந்துள்ளது. " கண்ணால் யானும் கண்டேன் காண்க " என்பதும், கேட்டறிதலையே குறிக்கும், " கேட்டறியோம் உனைக்கண்டறிவாரை " என்கிறது திருப்பள்ளிஎழுச்சி. இதனைச் சாத்திரம் கொண்டும் உணரலாம் கடலினை முற்றும் தெரிந்தவர் இலர். கடவுளை அறிதலும் அது போன்றதே.

" கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்
கடல்அளக்க வாராதாற் போலப் — படியில்
அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம்
கருத்துக்குச் சேயனாய்க் காண்.''

என்பது திருக்களிற்றுப்படியார்.

இஙஙனம் இறைவனது உணர்தற்குச் சேயனாகிய தன்மையை விளக்கித் திருவெம்பாவையில் துயிலெழுப்புவதாய் அமைந்த பாடல்கள் ஒன்பது சக்திகளில் முதன்மையான மனோன்மனி (சதாசிவத்துடன் தொடர்புடையது) சர்வபூதத மனியையும் சர்வபூததமனி, பலப்பிரதமனியையும் பலப்பிரத மனி பலவிகரணியையும் பலவிகரணி கலவிகரணியையும்,

கலவிகரணி காளியையும், காளி ரௌத்திரியையும், ரௌத்திரி ஜேஷ்டையையும் ஜேஷ்டை வாமையையும், துயில் எழுப்புவதாக அமைந்துள்ளமையைக் குறித்தருளினர்கள். குருமணிகள் ஓர் உளவியல் தத்துவத்தை ஒப்பிட்டு விளக்கினர்கள். திருவெம்பாவையில் ஒருத்தி மற்றொருத்தியை ஊக்கப்படுத்தித் துயில்எழுப்பும்முறை உளவியலோடு ஒத்ததுஎன அருளினர்கள்.

'முத்தன்ன வெண்ணகையாய்' என்ற பாடலில் பத்துடையீர் என்னும் தொடருக்கு, பற்றுடையீர் என்று பொருள் கொள்வதோடு, விபூதி, ருத்ராக்ஷதாரணம் முதலிய பத்துப் புற இலக்கணங்களையும், நாத்தழுதழுத்தல், கசிந்துருகல், மெய்ம்மயிர்ப் புளகம் முதலிய பத்து அக இலங்கணங்களையும் குறிப்பதாகப் பொருள் கொள்ளலாம். மேலும் தசகாரியங்களைக் குறிப்பதாகவும் கூறலாம் எனக் குறிப்பிட்டார்கள்.

தனிமனித நிலையில் மகனுக்கு நல்ல மனைவியும் மகளுக்கு நல்ல கணவனும் வாய்த்தல், சமுதாய உலகநிலையில் நாட்டின் சுபிட்சம் திருவெம்பாவை ஓதுவதால் ஆகும் பயன்களாகும்.

மேலும் ஒருகுறிப்பைத் திருவெம்பாவை கொண்டு அருளிச் செய்தார்கள். "புண்ணியதீர்த்தத்தில் நீராடும்போது நகைகளை அணிந்து கொண்டு நீராட வேண்டும். இதனைக் "காதார்குழையாடப் பைம்பூண் கலனுட" என்ற தொடர் விளக்கும் என்பது அது.

ஒரு சமுதாயக் குறிப்பு! விடியற் காலையில் பெண்கள், தனியாக ஓர் அச்சமும் இன்றி நீராடச் சென்றமை திருவெம்பாவையால் உணரப்படுவது; இந்நிலை நம்நாட்டில் மலர வேண்டும்.

அடுத்துப் "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என்ற தொடரை அற்புதமாக விளக்கினர்கள். "பேதம் இருந்தால் தான் வாழ முடியும்; சமத்துவம் பொருத்தமானது அன்று. அம்மை ஒரே தன்மையில் வைத்து உயிர்கட்கு அருளவில்லை, தகுதிக்கும் தரத்துக்கும் ஏற்ப ஆள்கிருள்." ஓர் எடுத்துக் காட்டினைக் கொண்டு விளக்குகின்ருர்கள். "வீட்டில் எல்லாருக்கும் ஒரே விதமான உணவா தருகின்றனர்? குழந்தைக்குப் பால்தருவர். மற்றவர்கட்கு வேறு வகை. அதிலும் வயோதிகர் நோயாளர்கட்கு அவரவர் நிலைக்கு ஏற்ப உணவு தரப்படுகின்றதன்றே! இப்படிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்"

அடுத்த "ஏழைபங்காளன்" இறைவனே எனக்குறித்தார்கள். ஏழை பங்கை ஆள்பவன் என்பது கருத்து. பரமனை

நோக்க அம்மை, ஏழை. பணம் குணம், வலிமை அறிவு முதலிய வற்றால் குறைந்தோரை ஏழை எனலாம். சிவத்தை நோக்கச் சக்தி ஏழை. 'எருதேறி ஏழையுடனே" என ஞானசம்பந்தர் தேவாரத்தில் ஏழை என அம்மையைக் குறித்தலை மேற் கோளாக்கினர்கள்.

"கனியினும் கட்டிபட்ட கரும்பினும்" என அப்பர் சுவாமி கள் எல்லா இடங்களிலும் இன்ப, துன்பமாக இறைவன் விளங் குதலைக் குறிக்கிறார். இந்தபாவனை "பைங்குவளைக் கார்மலரால்" என்னும் பாடலில் பொதிந்துள்ளமையை உணர வேண்டும். எவ்விடத்திலும் காணப்படும் செம்மை கருமைகளை அப்பனும் அம்மையுமாய்க் காணவேண்டும். மேலும் இப்பாடலில் பைங் குவளைக்கார்மலர் – நயனதீக்கையையும் 'செங்கமலப் பைம் போது – மானசதீக்கையையும், அங்கங்குருகினம் – பரிசதீக்கை யையும் அரவம் – வாசிக தீக்கையையும் குறிப்பது எனக்குறித் தருளினர்கள்.

போற்றியருளுக என்ற பாடல் இறைவனின் பஞ்சக்கிருத் தியம் கூறுகின்றமையைக் குறிப்பிட்டு, பஞ்சக்கிருத்தியப் பரமானந்தத் தாண்டவம் ஆடும் திருவாதிரை நாளில் இறை வனைத்தரிசித்தல் சிறப்பை (அந்நாளின்சிறப்பை) அருளினர்கள் "ஆதியும் அந்தமும் இல்லா" எனத் தொடங்கிப் "போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர், போற்றி யருளுகநின் அந்த மாம் செந்தளிர்கள்" என இறைவன் ஆதியந்தமில்லாத நிலையில் இருக்கும் தன்மையைத் திருவெம்பாவை முதல் பாட்டும் இறுதிப்பாட்டும் விளக்குதலைப் புலப்படுத்தினர்கள்.

பெரும்பான்மையும் அன்று திருவெம்பாவைப்பாடல்களின் தத்துவ விளக்கமாக அமைந்திருந்தது. அன்றைய புராணச் சிந்தனையாகக் குலச்சிறையார் பற்றிச் சில கருத்துக்களைத் தொடர்ந்து அருளிச்செய்தார்கள்.

மதுரையில் கூன்பாண்டியன் தேவியும் குலச்சிறையாரும் சைவநெறி தழைத்தோங்க ஞானசம்பந்தரை வருவித்தார்கள். "பெருநம்பி குலச்சிறை" எனச் சுந்தரரால் போற்றப்பட்டவர் குலச்சிறையார்.

நரஸ்துதியே செய்யாத ஞானசம்பந்தர் ஒரு பதிகத்தில் மானியாரையும், குலச்சிறையாரையும் பாராட்டியுள்ளார். ஐந்து பாடல்கள் குலச்சிறையாரைப் பாராட்டுவன.

மானியார் கணவனுடன் போராடவில்லை. திருவருளையே நம்பினர். அருள்வாயிலாகக் கணவனைத் திருத்தியவர். காலம் நோக்கித் திருத்தியவர்.

கணவன்முன் திருநீறு பூசியநெற்றியோடு காட்சியளித்தால் 'கண்டுமுட்டு ஆகுமே' என்பதற்காக மார்பில் நீறு, சந்தனம், பூசியவர்; கணவனையும் காத்துச் சமயநெறியினின்றும் பிறழாத தன்மையாளர்.

இத்தன்மையராகிய மானியாருக்குத் தொண்டு செய்தவர் குலச்சிறையார். அரசனுக்கு அமைச்சராகவும் அரசியின் தொண்டுக்குத் தொண்டராகவும் விளங்கியவர் இவர். இவர் திருநாவுக்கரசரை வரவேற்று உபசரித்த குறிப்பும் உண்டு.

"சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும் இனி எதிர் காலத்தின் சிறப்பும், இன்றெழுந்தருளப் பெற்றபேறு இதனால் எற்றைக்கும் திருவருள் உடையேம்; நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனும் உய்ந்து, வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்" என ஞானசம்பந்தரை வரவேற்றமையைச் சேக்கிழார் குறிப்பிடு கின்றார்.

குருநாதர் இக்குறிப்பை விளக்கும்போது, "உலக மக்கள் சென்ற காலத்தைக் குறை கூறுவர். பெரியோர் சென்ற காலத் தைப் பழுதற்றதிறன் உடையது எனக்கூறிப் போற்றியமையைக் கவனிக்க வேண்டும்" 'நன்றியில் நெறியில் அழுந்திய நாடு' என்னும் தொடரில் நன்மை என்ற பொருளில் நன்றி என்ற சொல் ஆளப்பட்டமையைக் குறிப்பிட்டு, 'எந்நன்றி கொன் ரூர்க்கும் உய்வுண்டாம்' என்ற குறளில் நன்மை எனும் பொருளில் நன்றி எனும் சொல் ஆளப்பட்டுள்ளமையை மேற் கோளாக அருளினார்கள்.

குலச்சிறையாரின் வரவேற்புப் பற்றி அருளிய குருமணிகள் எண்ணாயிரம் சமணரைக் கழுவேற்ற வேண்டிய நிலை ஏற்பட் டமை தொடர்பாக ஒரு நீதி ஸ்லோகப் பொருளை நாமுய்ய உபதேசித்தார்கள்.

"குடும்ப ஆபத்தைப் போக்க ஒருவனை இழக்கலாம்; சமுதாயத்தைக் காக்க ஒரு குடும்பத்தை இழக்கலாம்; ஒரு நாட்டைக் காக்க ஓர் ஊரை இழப்பதில் தவறில்லை" - என்பது அது.

குருமணிகள் ஆசீர்வதிக்கிறார்கள் – 1985 ஆம் ஆண்டு – ஆங்கிலப் புத்தாண்டு பிறந்துள்ளது. இவ்வாண்டு அனைவர்க் கும் நல்ல முறையில் அமைய வாழ்த்துவோம்! குருநாதரின்

ஆசி நம் வாழ்வை உறுதியாக வளப்படுத்தும்; மங்கல வாழ்த்துடன் அருளுபதேசம் நிறைந்தது; பண்டாரக்கட்டி லிருந்து வெளியே வருகிறோம்; குளிர்மிக்க மாலைக்காலம் ஆதலால் சூடான தேநீர் அளித்தார்கள்; அருந்தினோம்; மன நிம்மதியோடு இல்லம் திரும்பினோம்.

குருமணியின் தாளிணையைக் கும்பிட்டு வளம்பெறுவோம்!

தேச ஐக்கியத்தில் இந்திராவின் அக்கறை

புதுடில்லி ஜனவரி – 17. இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் காப்பதிலும், நலிவடைந்த மக்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதிலும் மறைந்த பிரதமர் இந்திராகாந்தி கொண்டிருந்த அக்கறை அவரே தம் கைப்பட எழுதிய ஒரு செய்தி மூலம் தெரிய வந்துள்ளது

மறைந்த பிரதமர் இந்திரா காந்திக்கு அஞ்சலி செலுத்த லோக் சபையில் இன்று நினைவஞ்சலி நிகழ்ந்தபோது சபா நாயகர் பலராம் ஜாக்கர் அதைச்சபைக்குவாசித்துக் காட்டினார்.

"இந்தியத் திருநாட்டின் புதல்வர்களே, புதல்விகளே நீங்கள் தொழிலாளர், விவசாயி, வர்த்தகர், தொழிலதிபர் ஆசிரியர், மாணவர், எழுத்தாளர் மற்றும் கலைஞர் என்று எந்தப் பிரிவை சார்ந்திருந்தாலும் இந்த நாட்டின் குடிமக்கள்.

இந்த நாட்டில் பிறந்த பெரிய தலைவர்கள், மற்றும் நாயகர்களின் குருதி உங்கள் நாளங்களில் ஓடுகிறது.

உங்களிடம் உள்ள தன்னம்பிக்கையற்ற நிலைமை மாறி நம்பிக்கை பிறக்கட்டும். குழப்பம் நீங்கித்தெளிவு பிறக்கட்டும். அதன் பிறகு நம்மால் வலுவான இந்தியாவை உருவாக்க முடியும்.

அழகிய பாரதத்தைப் பிறகு நம்மால் எழுப்பமுடியும். அப்படிச்செய்ய நம்மிடம் திறமை உள்ளது. மிகச் சிறப்பான ஒரு முயற்சியில் நாம் இறங்கியுள்ளோம். எதிர்வரும் ஒவ்வொரு பிரச்சனையையும் உறுதியுடனும், தைரியத்துடனும் எதிர் கொள்ளுவோம்."

இவ்வாறு திருமதி, இந்திராகாந்தி தமது கைப்பட நாட்டு மக்களுக்கு எழுதிய செய்தியை ஜாக்கர் சபையில் உருக்கமாக வாசித்தார்.

நன்றி. தினமணி, தேதி. 19—1—1985.

செய்திகள்

ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் தேவாரப்பாடல் பெற்ற தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. இம் மாதம் 9—1—85 புதனன்று காலை ஸ்ரீ இடையாற்றுநாதர் ஆலயத்திலும் திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ மெய்கண்டார் ஆலயத்திலும் மாலை திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ அருட்டுறைநாதர் ஆலயத்திலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நிகழ்வுற்றது 'திருஇடையாற்றுத்திருப்பதிகம்' என்ற நூல் வெளியிடப் பெற்றது. மாலை 7 மணியளவில் திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ கிருபாபுரீசுவரர் ஆலயத்தில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. திருவெண்ணெய்நல்லூர்த் திருக்கோயில் நிர்வாக அதிகாரி வரவேற்புரை வழங்கினர். தருமபுரம் வித்துவான் திரு வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ. 'சுந்தரர் பெருமை' பற்றியும், திருவெண்ணெய்நல்லூர்ப் புலவர் திரு. பஞ்சநதம் 'மெய்கண்டதேவர்' பற்றியும் உரையாற்றினர். திரு. பாலசுப்பிரமணிய ரெட்டியார் நன்றி கூறினர். அன்பர்கள் பலர் கலந்து கொண்டு வழிபட்டுப் பயனுற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கிலமாத முதல் ஞாயிறன்றும் காலை சரியாகப் பத்து மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம்பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 3—2—85 அன்று 44ஆம் அருளுபதேசம் நிகழ்வுற்றது.

முதலில் வழிபாடும் பிரார்த்தனையும் நிகழ்ந்தன. அடுத்துத் தருமையாதீனம் தேவஸ்தானம் கண்காணிப்பாளர் திரு. டி. என். அருணசலம், பி. ஏ. பி. எல் அவர்கள் திருவாசகத்தில் 'கற்போலும் நெஞ்சம்' எனத்தொடங்கும் திருத்தோணேக்கப் பாடலை மேனுட்டுத் தத்துவஞானியின் கருத்தோடு ஒப்பிட்டு விளக்கிச் சொற்பொழிவாற்றினர். 'தூயஉள்ளமே ஆண்டவன் இருப்பிடம்' என்னும் கருத்தை விளக்கினர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாகப் பெருமிழலைக் குறும்பர், பேயார் புராணங்களைத் தத்துவச் செறிவோடும் சமுதாய நோக்கோடும் உபதேசித் தருளினார்கள். பரம்பொருள் காலம் இடம் என்ற நிலையில் விளங்கித்தோன்றுதலை உலகியல் மூலம் விளக்கியருளினார்கள் பெருமிழலைக் குறும்பர்புராண உபதேசமாக "ஆசாரியர்களைத் தெய்வமாகவே கருதிவழிப்பட்டால் யோகநிலை கைகூடும்; எல்லாச் சக்திகளும் கிடைக்கும்" என அருளினார்கள். பேயாரா கிய காரைக்காலம்மையார் புராண உபதேசத்தின் போது "காரைக்காலம்மையார் முதல் குருவாக விளங்கியவர்; நம்மை நன்னெறிப்படுத்தியவர்" என அருளினார்கள். இல்லறம்நடத்து தல், வழிபாடுஆற்றல், பண்ணோடு ஒன்றிய பாடல்வாயிலாகப் பரவுதல் என்னும் மூவகையில் முதன்மையாக நின்று வழிகாட் டியவர் எனத்திறனாய்வு நோக்கில் அருளியமை தெளிவான ஆய்வாக விளங்கியது. அம்மையார் பாடல்களில் காணப் பெறும் சுத்தாத்வைத சித்தாந்த நெறியை நுட்பமாகச் சுட்டி யருளினார்கள்.

மயிலாடுதுறை அன்பர்களும் பக்தர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். அடுத்து 3—3—85 அன்று 45-ஆம் அருளுப தேசம் நிகழ இருக்கிறது. அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெறுக.

ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவச தேசிக சுவாமிகள் குருபூஜை விழா

தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்த பரவச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைவிழா மார்கழி 25 ஆம்நாள் (கிருஷ்ணபக்ஷ-திருதியை) 9—1—85 புதன் கிழமையன்று குருமூர்த்த ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி வழிபாடாற்றி னார்கள்.

ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும் மயிலாடுதுறை நகர அன்பர்களும் வழிபட்டுக் குருவருட்பிரசாதம் பெற்றுய்ந் தனர். காலை வழிபாட்டின் பின்னர், 'பண்டார சாத்திரங்கள்' என்றதலைப்பில் சொற்பொழிவுகள் நடைபெற்றன. வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ., வித்துவான் திரு மு. சிவச் சந்திரன் எம். ஏ. ஆகியோர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்

நூல்கள்பற்றியும் டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி. எச்டி, ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிகர் அருளிய வருணசிரம சந்திரிகை, சமாதி லிங்கப் பிரதிட்டா விதி என்ற நூல்கள் பற்றியும், வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன், எம், ஏ., ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிகர் அருளிய சித்தாந்த நிச்சயம் பற்றியும், வித்துவான் திருமதி ப. நீலா எம் ஏ., ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் காசித்தலத்தில் அருளிய நூல்கள் பற்றியும், சென்னை இலயோலா கல்லூரித் தமிழ்த்துணைப்பேராசிரியர் திரு. அ. பாலகுருவாயன், எம். ஏ., ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் பிற தலங்களில் அருளியநூல்கள் பற்றியும் உரையாற்றினர். பகல் 1 மணியளவில் மாகேசுவரபூசை நிகழ்வுற்றது, மாலை 8 மணியளவில் திருமுறைஇசையரங்கு நிகழ்ச்சியை அடுத்துக் குருமூர்த்த வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. அன்பர்பலர், கலந்துகொண்டு குருவருட்பிரசாதம்பெற்றுப் பயனடைந்தனர்.

வேளூரில் தைச்செவ்வாய்த் திருவிழா

தருமையாதீனத்திற்குச்சொந்தமானவைத்தீசுவரன்கோயில் என வழங்கும் திருப்புள்ளிருக்குவேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக் குமாரசுவாமிக்குத் தைச்செவ்வாய்த் திருவிழா 27—1—85 முதல் 5—2—85 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருவிழா நாட்களில் காலை மாலை ஆகிய இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. 4—2—85 திங்களன்று திருத்தேரில் பவனிவருதலும் 5—2—85 அன்று சித்தாமிர்த தீர்த்தத்தில் கடைச் செவ்வாய்த் தீர்த்த விழாவும் சிறப்பாக நிக வுற்றன. நாள்தோறும் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி சந்நிதியில், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ், சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், பழநி முருகன் பிள்ளைத்தமிழ், திருவிலஞ்சி முருகன் பிள்ளைத்தமிழ், திருமலை முருகன் பிள்ளைத்தமிழ், ஸ்ரீ முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் பற்றிய விரிவுரைகள் தக்க புலவர் களைக்கொண்டு நிகழ்த்துவிக்கப்பெற்றன. தேவஸ்தானத் திருமுறைப் பணியாளர், திருமுறைக் கலாநிதி, திரு. க. சொக்க லிங்க ஓதுவார் நாள்தோறும் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினர். அன்பர் பலர் பெருமானை வழிபட்டும், சொற்பொழிவு களைக் கேட்டும் பயனுற்றனர்.

கடவூர் ஸ்ரீ அபிராமிபட்டர் அருள்பெறு திருநாள்

திருக்கடவூர் ஸ்ரீ அபிராமியம்மை உடனுகிய ஸ்ரீ அமிர்த கடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில், ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமிக்கு 20—1—85 ஞாயிறன்று ஸ்ரீ அபிராமிபட்டர் அருள்

பெற்ற நாளாகிய தை அமாவாசைநாளில் காலை மகந்நியாச பூர்வக ஏகாதச ருத்ராபிஷேகமும் அலங்கார ஆராதனைகளும் நிகழ்வுற்றன. இரவு ஸ்ரீ அபிராமி அம்மைக்கு விசேஷ அலங்காரமும் நவசக்தி அருச்சனையும் அபிராமி அந்தாதி பாராயணமும் நிகழ்வுற்றன. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். உலகநலம் கருதிய இவ்விழாவைச் சென்னை அபிராமி அந்தாதி டிரஸ்ட் தன் உபயமாகச் சிறப்பாகநிகழ்த்தியது. விழாவில் அன்பர்பலர் கலந்து கொண்டு தரிசித்துப் பயன் பெற்றனர்.

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி எம்.ஏ., பி. எச்டி., அவர்கட்குப் பாராட்டுவிழா

தருமையாதீனப் பல்கலைக்கல்லூரிப் பேராசிரியர் திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி. எட்., அவர்கள் 'தருமையாதீனத்தின் தமிழ் வளர்ச்சிப்பணி' பற்றி ஆய்வுசெய்து டாக்டர் பட்டம் பெற்றமையைப் பாராட்டித் தருமையாதீனம் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகத்தின் சார்பில் 25—1—85 அன்றும் நாட்டு நற்பணித் திட்டச்சார்பில் 21—1—85 அன்றும் பாராட்டுவிழாச் சிறப்பாக நிகழ்வுற்றது. பேராசிரியர் டாக்டர், திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி.எட்., பி. எச்டி. அவர்கள் திருவருளும் குருவருளும் துணைநிற்கத் தாம் மேற்கொண்ட ஆய்வுக்குத் துணைபுரிந்த அனைவர்க்கும் பாராட்டு நல்கிய மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் மற்றும் தமிழறிஞர்கட்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

திருவெம்பா வ விழா

தருமையாதீன அருளாட்சியில் விளங்கும் திருக்கோயில்களில் மார்கழி திருவாதிரை விழாவை ஒட்டித் திருவெம்பாவை விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது 4—1—85 அன்று வேளூர் அருள்மிகு வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி. எட்., பி. எச்டி., அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திருமதி. ப நீலா, எம். ஏ., அவர்களும், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு கா ம. கண்ணப்பன், எம். ஏ., அவர்களும், குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் புலவர் திரு. கே. கணபதி. பி. லிட்., அவர்களும் 5—1—85 அன்று திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்

தானத்தில் வித்துவான் திரு. சொ. முத்தையன் எம். ஏ., அவர்களும், சீகாழி, ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பி. எட்., அவர்களும், பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் திருவாசக உரைமணி, வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., அவர்களும், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. சுவர்ணகாளீசுவரன் அவர்களும், திருவெம்பாவைச்சொற்பொழிவு ஆற்றினர். அவ்வத்தலங்களில் திருவெம்பாவை பண்ணிசையுடன் ஓதப்பெற்றது. தலப்பெருமக்களும் அன்பர்களும் சொற்பொழிவுகளைக் கேட்டும் வழிபாடாற்றியும் பயனுற்றனர்.

ஸ்ரீ மௌனகுரு, ஸ்ரீ தாயுமானவசுவாமி குருபூஜை

இவ்விழா 16—1—85 புதன்கிழமை தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த திருச்சிமௌனமடத்தில் நடைபெற்றது. இவ்விழாவின்படி காலை 6 மணி அளவில் அடிவாரத்திலிருக்கும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாருக்கும், ஸ்ரீ உச்சிப்பிள்ளையாருக்கும், மலைக்கோயில் ஸ்ரீ தாயுமானசுவாமிக்கும், அம்பாள் ஸ்ரீ மட்டுவார்குழலம்மை, மற்றும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சுவாமிக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடந்தேறின. ஸ்ரீ முத்துக்குமரசுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனையும், மௌனமடத்துப் பூசை மடத்தில் கட்டளைத் தம்பிரான் சுவாமிகளால் குருபூஜை ஆராதனையும், சிறப்பாக நடத்தப்பட்டன மதியம் 1 மணியளவில் மௌன மடத்தில் மாகேசுவர பூஜை நடைபெற்றது.

மேற்படி விழாவினை ஒட்டி, ஸ்ரீ தாயுமானவர்சுவாமிகோவில் நூற்றுக்கால்மண்டபத்தில் பக்திப்பாடல்கள், தேவார இன்னிசை மற்றும் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது மாலை 6 மணிக்குத் தொடங்கிய இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் கட்டளைத் தம்பிரான் வித்துவான் மௌன. மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். கருத்தரங்கத்திற்கு, திருச்சி மாவட்ட பிரதம நீதிபதி திரு என். பழனியப்பன் பி. ஏ பி. எல். அவர்கள் தலைமைதாங்கினர்கள், நாகைசப்ஜட்ஜ் திரு. எஸ் ஆறுமுகம் M. A. B. L. திருமுறைச்செல்வர் புலவர் மு. கணபதி, இறையருட்செல்வர் டாக்டர் மகா. வேங்கடராமன் எம். ஏ., பி, எச்டி, புலவர் திரு சுப்பராயன், ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். இரவு 9 மணிக்குத் திருச்சி மௌனமடம் பூஜைமடத்தில் குருபூஜையை அடுத்து விழா நிறைவுற்றது. அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கப்பெற்றது. அன்பர்பலர் விழாவிற் கலந்துகொண்டு திருவருளும் குருவருளும் பெற்றுய்ந்தனர்.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(இரக்தாக்ஷிஹு மாசிமீ 1௨ முதல் 30௨ முடிய)

(12—2—1985 முதல் 13—3—1985 முடிய)

ஸ்ரீ இரக்தாக்ஷிஹு மாசிமீ 1௨ மங்களவாரம் விசாக நக்ஷத்திரம் பாலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 21 நாழிகை 21 விநாடிக்கு மிதுன லக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் லோகசுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மகரராசியிலிருந்து கும்பராசி சங்கிரமணமாக மாசிமாதப்பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலம். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் இறைவனருளில் சிவசமய காப்பாளாக வந்து சிவராஜயோகத் திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள் லோகமாந்தர்களுக்கு சிவாசாரநியமங்களை போதித்து அருள்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாகவரும். முன்வரவேண்டியவைகள் வரும். சகோதரருக்கு அரசு நன்மைகளை உண்டுபண்ணும். வீடு வாகனங்களில் நல்ல அனுபோகம் இருந்துவரும். புத்திரர்களுக்கு உயர்வு ஏற்படும். எல்லாக் காரியங்களும் முன் குறிப்பிட்ட படி வெற்றியாக நடக்கும். பிப்ரவரி 13, 14 மார்ச்சு 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம் ஞாயிறு திங்கள் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானங்களில் நல்லஸதிதியை ஏற்படுத்தி வரும். உடன் சம செலவினங்களும் ஏற்படும். அடிக்கடி வெளியூர் செல்லுதல் ஆகும். பசுபால் பிராப்தியையளிக்கும். புத்திரர் பௌத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். பிப்ரவரி 15, 16 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். பூமியில் செந்நெல்பிராப்தியில் நற்பலன் வந்து சேரும். நவீனவாகனம் தரும். குடலில் வாயு அல்லது மஞ்சக்காமாலை போன்ற நலிவு ஏற்பட்டு உடன் குணமாகும். எல்லாக்காரியங்களும்குறிப்பிட்டுள்ளபடிநடக்கும் பிப்ரவரி 17, 18தேதிகள் சந்திராஷ்டமம் வியாழன் வெள்ளிசுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். நல்ல தனம் தரும். வஸ்திரபூஷணங்கள் தரும். நல்ல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல் நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு ஏற்படுதல் ஆகும். நல்ல வாகனம் தரும். இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி ஏற்படும். அரசாங்க கீர்த்தியை உண்டுபண்ணும். எல்லாக்காரியங்களையும் வெற்றியாக நடத்தும். பிப்ரவரி 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தி வரும். சகோதரர் நல்ல ஸ்திதியில் இருந்து வருவர். பூர்வ சொத்து பிராப்தியில் நல்ல ஏற்பாடு நடக்கும். வாகன சுகம் திருப்தியளிக்கும். பிப்ரவரி 28 வ அளவில் எழுத்து மூல விஷயங்களில் நன்மைகளை உண்டுபண்ணும். பிப்ரவரி 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம் திங்கள் செவ்வாய் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். நல்ல பூஷணம் தரும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியங்களை ஏற்படுத்திவரும். புத்திரர்களின் கல்வி கலைகளில் முன்னேற்றம் ஏற்படும். பிரபு நேசம் பெருமதிப்பு ஏற்படுதல் ஆகும் எல்லாக்காரியங்களும் இராஜ கண்யமாக நடந்து வரும். பிப்ரவரி 24, 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானங்கள் கணிசமாக வந்து சேரும். சகோதரருக்கு விசேஷ நன்மைகளை உண்டுபண்ணும். பூமி இயந்திரங்களில் நற்பலன் வரும். எழுத்துமூல விஷயங்களில் லேவா தேவிகளில் மார்ச்சு முதல் நல்லன ஏற்படும். எல்லாக்காரியங்களும் நல்லவிதமாக நடந்து வரும். பிப்ரவரி 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் பெருமதிப்பில் வந்துகொண்டிருக்கும். அதற்கேற்ப செலவினங்களும் ஏற்படும். நவீன பொருள் வாங்குதல் ஆகும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்திபலன் ஏற்படும். வாகனசுகம் திருப்தியளிக்கும். எல்லாக்காரியங்களும் இராஜகண்யமாக நடந்துகொண்டிருக்கும். மார்ச்சு 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். பணவருமானங்களில் நல்லஸ்திதியை ஏற்படுத்திவரும். இரத்தின பூஷணம் தரும். மனஸ்தாபமாக இருந்த ஒருவர் வந்து கூடுவர். நல்ல வாகனம் தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். மார்ச்சு 3, 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பணவருமானங்கள் கண்யஸ்திதிக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். இரத்திணபூஷணம் தரும். இயந்திர சாதனங்களில் நல்லன ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் அரசாங்கத்தில் நன்மைகளை ஏற்படுத்தும். எல்லாக்காரியங்களையும் திடசித்தபோக்கில் நடத்திவரும். மார்ச்சு 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம்–பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். தனவருமானங்கள் கெடியான தோரணைக்கு ஏற்பவரும். நல் விஷயங்களில் தெய்வ கைங்கர்யம் ஆகியவற்றில் விசேஷ செலவும் செய்யும். வித்தியா வியாபாராதிகளில் ஒப்பந்தங்களில் மார்ச்சு 3உ ஆனல் நற்பலன் தரும். எல்லாக்காரியங்களையும் ஊக்கத்துடன் செய்தல் ஆகும். மார்ச்சு 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பணவருமானம் வெகுவாக வந்துகொண்டிருக்கும். அதற்கேற்ப செலவினங்களும் ஏற்படும். வித்தியாவியாபாராதிகளில் கலைத்துறையில் முதலீடும் விளம்பரமும் ஏற்படச்செய்யும். நவீனபொருள் வாங்குதல் ஆகும். ஓர் ஆபத்து நிலையிலிருந்து புத்தி சத்தியால் சமாளித்தல் ஆகும். பிப்ரவரி 12 மார்ச்சு 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபம்.

தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன்

சிறு சுகாதாரநிலையம் தொடக்க விழா

தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாசியுடன் ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் சார்பில், தருமபுரம் ஸ்ரீ தருமபுரீஸ்வரர் சந்நிதித்தெரு 3-ஆம் எண் இல்லத்தில் தருமபுரம், அச்சுதராயபுரம், கருங்குயில் நாதன் பேட்டை, மணக்குடி, மூங்கில் தோட்டம், மன்னன் பந்தல் ஆகிய கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் நலனுக்காக அரசு மான்யத்துடன் இலவசச் சிறு சுகாதார நிலையம் 8—2—1985 வெள்ளிக்கிழமை மாலை 5-15 மணிக்குத் தொடங்கப் பெற்றது. தொடக்க விழாவிற்கு மயிலாடுதுறை அரசினர் மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் திரு. வீர. இராசேந்திரன் அவர்கள் தலைமை ஏற்றார்கள். அவர்கள் தலைமையுரையில் "நோயாளிகளுக்குமருத்துவம்பார்ப்பதுஎங்கள்கடமை; அவற்றின்முடிவை அளிப்பது இறைவனின் திருவருளே," என்னும் கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள். நிலையத்தைத்துவக்கி வைத்த மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர். திரு. ஏ. சந்திரசேகரன் அவர்கள் இந்த சுகாதார நிலையம் மருத்துவமனை மட்டும் அன்று; சுகாதாரமாக இருக்கவழிவகைகள் கூறும் ஆலோசனைநிலையமும் ஆகும் என்றும் இதுபோன்ற நிலையங்கள் இந்தியாவில் தமிழ் நாட்டில் மட்டிலும் உள்ளன என்றும், 250க்கு மேற்பட்ட நிலையங்கள் நம் நாட்டில் இயங்கி வருகின்றன என்றும் கீழ்த்தஞ்சைப் பகுதியில் சுமார் 11 நிலையங்கள் உள்ளன என்றும், இவை விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற சமூக சமய நலநிறுவனங்களின் உதவியுடன் நடைபெறுகின்றன என்றும், ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் சார்பில் இங்கே இன்று துவங்கப் பெறுகிறது என்றும், இந்நிலையம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஆசியுடன் தொடங்குவதால் மற்ற நிலையங்களுக்கு முன்மாதிரியான நிலையமாக விளங்கும் என்று தாம் நம்புவதாகவும் தெரிவித்தார். அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் திரு. ஏ. வீ. ஜயச்சந்திரன் அவர்கள் நம்முடைய பழைய வாழ்வு நெறிகள் குறையத் தொடங்கியுள்ளதால் மருத்துவ நிலையங்கள் வேண்டப்படுகின்றன என்றும் எனினும் அம்மருத்துவ நிலையங்கள் எளிய இனிய நிலையங்களாகவும் ஆலோசனை கூறும் நிலையங்களாகவும் இருந்து வருவது வரவேற்கத்தக்கது என்றும் கூறினர்.

பகுதி நேர மருத்துவராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் திரு. ஏ. நடராசன் அவர்கள், "வேண்டி என்னைப்பணி கொண்டாய்..." என்னும்மணிவாசகரின் அருள்வாக்கினை நினைவுகூர்ந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் மேற்கொண்டுள்ள அரும்பெரும் பணிகளில்தாமும் இணைந்துகொள்வதில் பெருமை கொள்வதாகவும் சேதுஅணை கட்ட அணில்உதவியது போன்று தாமும் இருந்து உதவ இருப்பதாகவும் கூறினர்.

முன்னதாக டாக்டர் திரு. மு. சுவாமிநாதன் அவர்கள் வரவேற்புரை வழங்கினர். நன்றியுரையைத் திரு. வி. ஆறுமுகம் பிள்ளை (I. A. S. Retd) அவர்கள் கூறினர். இருவரும் குருமகா சந்நிதானம் அவர்கள், இப்பொழுது திருமடம் இருக்கும் பொருளாதார நிலையில் இதுபோன்று சமுதாய நலப்பணிகளைத் தொடங்கி நடத்துவது எண்ணிப் போற்றுதலுக்குரியதாகும் என்று கூறினர்கள். முன்னதாக டாக்டர் திரு. ஏ. நடராசன் அவர்கள் ஐவருக்கு மருத்துவ உதவியை மருத்துவ இல்லத்தில் வழங்கினர். இந்நிலையம் (ஞாயிறு நீங்கலாக) ஒவ்வொருநாளும் காலை 7-00மணி முதல் 9-00மணி வரை இயங்கும். இந்நிலையத்தில் மருத்துவ உதவி பெற விரும்புவோர் மாதம்தோறும் ரூ. 1. (வசதி உள்ளவர்கள் ரூ. 5.) செலுத்தி மருத்துவ உதவியினைப் பெறலாம்.

பெரியது கேட்கின்.....

மிக அதிக மக்கள்தொகையுள்ள நகரம் :
ஷாங்காய் - 1 கோடி மக்கள்.

மிக நீண்ட பாதைவழிச் சுரங்கம் :
ஷைகான் (ஜப்பான்) 33½ மைல் நீளம்

மிக நீண்ட நீர் அணைக்கட்டு :
ஹிராகூத் (இந்தியா) 15. 8 மைல் நீளமுள்ளது.

மிக உயர்ந்த கட்டிட அமைப்பு :
டி. வி. மாஸ்ட் - அமெரிக்கா - 2063 அடி உயரம்.

மிகப் பெரிய புகைவண்டி நிலையம் :
கிராண்ட் சென்ட்ரல் டர்மினல் - அமெரிக்கா : 47 பிளாட்பாரங்கள் - 67 ரயில்பாதைகள் - 48 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது.

மிக நீண்ட இரயில்வழிப் பாலம் :
கீழ் சாம்பஸி - மொஸாம்பிக் - ஆப்பிரிக்கா - 12,064 அடி நீளம் உள்ளது.

அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்

முதலாவது கருத்தரங்கம்

ஜனவரி 26, 27–இல் நடைபெற்றது.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளக் குறிப்பின் படி அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் முதலாவது கருத்தரங்கம் ஜனவரி 26–27 சனி, ஞாயிறு ஆகிய இருதினங்களிலும் காலை மாலை இருவேளைகளிலும் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வழிபாட்டு அறையில் சிறப்புற நடைபெற்றது. சைவசித்தாந்த சாத்திர நூல்களில் "பதிக்கொள்கை" எவ்வாறு பகரப் பெற்றுள்ளது என்பதுபற்றிக் கல்லூரிப் பேராசிரியர்களும் அறிஞர் பெருமக்கள் பலரும் ஆய்வுக்கட்டுரைகள் வாசித்தனர்.

ஜனவரி 26 சனிக்கிழமை காலை அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறைத்தலைவர் டாக்டர் திரு. ஆர். கோலப்பன் அரங்கைத் தொடங்கி வைத்து உரையாற்றினர். மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை ஆய்வாளர் டாக்டர் திரு. ஜி. விஜயவேணுகோபால்நீண்டதோர் அணிந்துரைவழங்கி ஞர்கள். முன்னதாக ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் திரு. ஏ. வி. ஜயச்சந்திரன் வந்திருந்த அனைவரையும் வரவேற்று ஆராய்ச்சி நிறுவனத்தின் பலதிறப்பட்ட நோக்கங்களை விரித் துரைத்தார். ஆய்வு அரங்கத்திற்கு மகாவித்துவான் முதுமுனைவர் திரு. ச. தண்டபாணி தேசிகர் தலைமை வகித்தார். டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன், டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி, திருமதி. மீராகிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஆய்வுக் கட்டுரை வாசித்தனர். பிற்பகல் தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் ஆதீன வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் தலைமைவகிக்க, வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன், திரு. வித்து வான் சொ. முத்தையன் ஆகியோர் தொடர்ந்து ஆய்வுக்கட்டு ரைகள் வழங்கினர்.

ஜனவரி 27 ஞாயிறு காலை வித்துவான் திரு. மு. சுந்தரேசம் பிள்ளை, வித்துவான். திருமதி. ப. நீலா ஆகியோர் தமதுகட்டு ரைகளை வாசித்தனர். பிற்பகல் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி தலைமை யுரை வழங்கினர். வித்துவான் திரு. தா. ம. வெள்ளைவாரணம். சுவாமி வீரபாகு ஆகியோர் தம் கட்டுரைகளை வாசித்தனர்.

ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர். திரு ஏ. வி. ஜயச்சந்திரன் நன்றிகூற முதலாவது கருத்தரங்கம் இனிது நிறைவெய்தியது.

கடிதம்:

ஆ. சண்முக நயினார்
பி. காம்., எச்.டி.சி.,
கூட்டுறவு சங்கங்களின்
இணைப்பதிவாளர். (ஓய்வு)

அசோக்நகர்,
சென்னை - 83
9—1—1985

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடிகளுக்கு வணக்கம்.

'ஞானசம்பந்தம்' டிசம்பர் 1984 இதழில் பல பயனுள்ள கருத்தோவியங்களைப் படித்துப்பயன் பெற்றேன். யாவற்றிலும் தலையாயது 18—11—84ல் குருமகாசந்நிதானம் வழங்கியுள்ள ஆசியுரையேயாகும். சாத்திர நூற்களில் அவ்வளவு பயிற்சி இல்லாத என்போன்றார்க்கும் புரியும்வகையில் அமைந்த அரிய கட்டுரை. முதல்ஞாயிறுதோறும் சந்நிதானம் அவர்கள் மயிலாடுதுறை அன்பர்களுக்கு வழங்கிவரும் அரிய கருத்துக்களைத் தொகுத்துக்கட்டுரையாகவழங்கிவரும்திரு. கா. ம. கண்ணப்பன் அவர்களின் தொண்டு வெளியூர் அன்பர்களுக்குப் பெரிதும் பயன்படுவதாகும்.

"மூவர் தமிழில் முருகன்" என்ற தலைப்பில் டாக்டர் சொ. சிங்காரவேலனார் அவர்கள் தந்துள்ள கட்டுரை பல அரியகருத்துக்களைக்கொண்டு ஒரு முழுமையான (Comprehensive) கருத்தோவியமாக அமைந்துள்ளது. முருகன் பற்றிய குறிப்புகளில் 'தெய்வயானைகணவன்' 'குறிஞ்சிநிலக்கடவுள்' ஆகிய குறிப்புக்கள் மூவர்தமிழில் காணப்படாமைக்கு ஆசிரியர் கண்டுள்ள அமைதி மிகவும் பொருத்தமானதாகவே தோன்றுகிறது.

தருமை தமிழ்க்கல்லூரிப் பேராசிரியர் திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் "டாக்டர்" பட்டம் பெற்றுள்ளது தருமைக் கல்லூரிக்கு மேலும் பெருமைசேர்ப்பதாகும். டாக்டர். சொ. சியை அடுத்து "டாக்டர்" பட்டம் பெறும் தருமைக்கல்லூரி மாணவர் இவர்தான் என்று கருதுகிறேன். "தருமை ஆதீனத்தின் தமிழ்த்தொண்டு" என்பதையே அவர்கள் ஆய்வுப்பொருளாக எடுத்துக்கொண்டது அவர்களின் நன்றியுணர்வுக்கு எடுத்துக்காட்டு. அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையைத் தொடர்ந்து "ஞானசம்பந்தம்" இதழில் வெளியிட்டால் பலருக்கும் பயன்படும். தருமையின் தமிழ்த்தொண்டு வெளியுலகுக்குத் தெரியும் வாய்ப்பும் ஏற்படும். கட்டுரையைத்தனியே எடுத்துத்தொகுத்து வைத்துக்கொள்ளும் வகையில் தனிப்பகுதி (பாரம்) ஆக அச்சிட்டால் நலமாக இருக்கும்.

அடியேன்,
ஆ. சண்முக நயினார்

இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி: பாடம் – 1.

வேதம்

வேதத்தின் இருகாண்டங்கள் :

வேதம் என்ற சொல்லுக்கு அறிவைத் தரும் நூல் என்பது பொருள். "வித-ஞானே" என்ற வேர்ச் சொல்லிலிருந்து எழுந்தது வேதம் என்ற சொல்.

நாம் செய்யும் நற்செய்கைகளின் பயனுக நம்மிடம் ஒரு சக்தி உருவாகின்றது. அதற்கே தர்மம் என்றும் புண்ணியம் என்றும் பெயர். பொறிகளுக்குப் புலனுகாமையால் அதை அதிருஷ்டம் என்றும் சொல்லுவார்கள். அதுதான் நமது சுகத்திற்குக்காரணம். தர்மத்தையும் அதற்குக் காரணமான வேள்விகள் முதலான நற்கருமங்களையும் நமக்கு அறிவிப்பதால் வேதத்தின் முற்பகுதி கரும காண்டம் எனப்படும்.

கர்மங்களின்பலன் அவரவர்கட்குக் கிட்டுவதற்குக் காரணமாயுள்ள கடவுள் தத்துவமும் பொறிகளுக்கு அப்பாற்பட்டது.

வாசனையைக் கொண்டு உள்ளே ஊதுவத்தி எரிவதை – அனுமானமாக – உணர்வதுபோல் காரியமான இவ்வுலகைக் கொண்டு காரணமான கடவுளை அனுமானம்செய்யலாமாயினும் சரியான நிர்ணயம் ஏற்பட முடியாதாகையால் வேதத்தையே கடவுள் விஷயத்திலும் பிரமாணமாகக் கொண்டுள்ளார்கள்.

கடவுளைப்பற்றி நமக்கு ஐயமறப்போதிக்கும் வேதத்தின் பிற்பகுதி ஞானகாண்டம் எனப்படும்.

வேதங்கள் நான்கு :

வேதம் ஒன்ருகவே இருந்தது எண்ணிலடங்காத மந்திரங்கள். பரத்வாஜர் என்ற முனிவர் வேதம் முழுவதையும் கற்றுவிடவேண்டும் என்றவிருப்பத்துடன் இந்திரனைக்குறித்துத் தவம் செய்து மூன்றுமடங்கு ஆயுளைப் பெற்றும் கற்றுமுடிக்க முடியாமல் மறுபடியும் தவம் செய்யத் துவங்கினர். இந்திரன் அவருக்கு எதிரே மலைகளைத் தோற்றுவித்து "இவைகள் நீர் கற்கவேண்டிய வேதம்: இதுவரை கற்றது இதோ." என்று கையில் ஒரு பிடி மண்ணைக் காண்பித்தான். யஜுர் வேதத்தில் வரும் இந்தக் கதையிலிருந்து பிறந்ததே – கற்றது கையளவு, கல்லாதது மலையளவு – என்ற பழமொழி.

துவாபரயுகத்தில் பராசர முனிவரின் குமாரரான கிருஷ்ண த்வைபாயனர் மனிதர்களின் ஆயுளும் நினைவாற்றலும் குறைவதை மனதிற்கொண்டு வேதத்தை நான்காகப் பிரித்தும் அவற்றில் ஒவ்வொன்றையும் பல சாகை (கிளை) களாகப் பிரித்தும் வேதம் கற்பதைச் சுலபமாக்கினர். இவ்விதம் வேதத்தைப் பிரித்தமை காரணமாகவே அவருக்கு வேதவியாஸர் என்ற புகழ்ப்பெயர் ஏற்பட்டது. வியாஸர் என்ற சொல்லுக்குப் பிரிப்பவர் என்று பொருள்.

வேதங்களின் பெயர்கள் :

வேதம் – ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வ வேதம் என்ற பெயருடன் நான்கு வேதங்களாகப் பிரிக்கப் பட்டது. அவைகளை வேதவியாஸர் முறையே பைலர், வைசம்–பாயனர், ஜைமினி, ஸுமந்து என்ற தனது சிஷ்யர்கள் நால்வருக்கு உபதேசம் செய்து அவர்கள்மூலம் பிரசாரம் அடையச் செய்தார்.

ருக் என்பது சந்தத்துடன் கூடிய செய்யுளைக் குறிக்கும். ருக்வேதம் செய்யுள் வடிவில் இருப்பதால் அதற்கு அந்தப் பெயர். வேள்விகளில் தேவதைகளை அழைப்பதற்கு இந்த வேதம் உபயோகமாகிறது.

யஜுஸ் என்றால் உரைநடை என்றுபொருள். பெரும்பாலும் உரைநடையாகவே அமைந்த யஜுர் வேதத்தில் செய்யுள்களும் உண்டு. இந்த வேதம் பயின்றவர் வேள்விகளில் தேவதைகளுக்கு அவியை அளிக்கும் அத்வர்யுவாக இருக்கிறார்.

ஸாம என்றால் இசை. ஸாமவேதம் ஏழு ஸ்வரங்களின் அமைப்புடன் கானம் செய்யப்படுகிறது.

ஸாமவேதம் ருக் (செய்யுள்) வடிவத்தில் உள்ளது. இந்த செய்யுள்கள் பெரும்பாலும் ருக்வேதத்தில் உள்ளவை. சில தனியாகவும் இருக்கின்றன. ஸாமவேதத்தில் உள்ள ருக்குகள் ருக்வேதம், யஜுர்வேதம், அதர்வவேதம் போல் நான்கு ஸ்வரங்களிலும் (உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம், பிரசயம்) ஓதப்படுகின்றன.

எனவே ஸாமவேதத்தில் இரண்டுவிதமான ஓதும் முறை இருக்கிறது.

வேள்விகளில் அழைக்கப்பட்ட தேவதைகளைப் போற்றிப் பாட இந்த வேதம் உபயோகமாகிறது.

அதர்வ வேதம், அதர்வா என்ற முனிவரால் கண்டறியப் பட்ட மந்திரங்கள் பல கொண்டது.

ருக், யஜுர், ஸாம வேதங்கள் மூன்று மாத்திரமே ஸோம யாகம் முதலான வேள்விகளில் உபயோகமாகின்றன. அதர்வ வேதத்தில் நன்மை பயக்கவும், கேட்டை நீக்கவும், விரோதி களை ஒழிக்கவும் உபயோகமாகும் மந்திரங்களும் ஹோமங் களும் கூறப்பட்டிருக்கின்றன.

வேதங்களின் சாகைகள் :

ருக்வேதத்திற்கு 21 சாகைகள். அவைகளில் தற்போது ஐதரேயம் என்ற ஒரு சாகையே ஓதப்பட்டுவருகிறது.

யஜுர்வேதத்திற்கு 101 சாகைகள். அவற்றில் தற்போது தைத்திரீயம், காண்வம், மாத்யந்தினம் என்ற மூன்று சாகை களே வழக்கில் இருக்கின்றன.

யஜுர் வேதத்தை உலகுக்கு உபதேசித்த வைசம்பாயன ருக்கு யாஜ்ஞ்யவல்க்யர் என்பார் ஒருசிஷ்யர். அவர் தவத்தில் மிகச் சிறந்தவர். ஒரு சமயம் அவரிடம் வைசம்பாயனருக்கு மனத்தாங்கல் ஏற்பட்டு என்னிடம் கற்ற வேதத்தைத் திருப்பி யளித்துவிட்டுப் போய்விடு என்று சினந்து கூறினர். உடனே யாஜ்ஞ்ய வல்க்யர் தான் அதுவரை கற்ற யஜுர் வேதத்தைக் கக்கிவிட்டுச் சென்றுவிட்டார். வைசம்பாயனரின் மற்ற சிஷ்யர் கள் அந்த வேதத்தின் அருமை தெரிந்தவர்களாதலால் தித்திரி என்றகுருவியின் உருவம் எடுத்துக்கொண்டு அதைச்சாப்பிட்டு விட்டார்கள். அவர்கள் மூலம் பரவிய யஜுர் வேதப்பகுதிக்கு தைத்திரீய சாகை என்றுபெயர். இந்த சாகையில் மந்திரமும் பிராம்ஹணமும் கலந்து இருப்பதால் – விளக்கமாக தனித் தனியே இல்லாததால் – இதற்கு கிருஷ்ண யஜுர்வேதம் என்று பெயர். கிருஷ்ண என்றால் கருப்பு.

பின்னர் யாஜ்ஞ்யவல்க்யர் சூரியனைக் குறித்துத் தவம் செய்தார். சூரியபகவான் வாஜி எனப்படும் குதிரையின் உருவத்தில் தோன்றி அவருக்குத் தூய்மை மிகுந்த யஜுர் வேதத்தை உபதேசித்தார். அந்த வேதம் சுக்ல யஜுர் வேதம் எனப்படும். அதற்கு வாஜஸனீ என்றும் பெயர். சுக்லம் என்றால் தெளிவானது என்று பொருள். சுக்ல யஜுர்வேதத்தில் காண்வம், மாத்யந்தினம் என்ற இரண்டு சாகைகள் வழக்கில் உள்ளன. ஆக யஜுர் வேதத்தில் மூன்று சாகைகள் இருக்கின்றன.

ஸாமவேதத்திற்கு ஆயிரம் சாகைகள். அவற்றில் தற்போது கௌதுமம், தலவகாரம் என்ற இரண்டு சாகைகள் ஓதப்

படுகின்றன. கௌதும சாகை பரவலானது. தலவகார சாகையினரின் எண்ணிக்கை குறைவு. இந்த சாகையில் டகர மூன்ருவது எழுத்தை ழ என்றே உச்சரிக்கிருர்கள்.

அதர்வ வேதத்திற்கு ஒன்பது சாகைகள். தமிழ்நாட்டில் அதர்வவேத சாகையினர் இல்லை. குஜராத் மாநிலத்தில் அதர்வ சாகையில் சௌனக சாகையைச் சேர்ந்த சிலர் இருக்கிருர்கள்.

சாகையின் உட்பிரிவுகள் :

ஒவ்வொரு சாகையிலும் மந்திரம் (ஸம்ஹிதா), பிராம்ஹணம், ஆரண்யகம் என்ற மூன்று பகுதிகள் இருக்கின்றன. மந்திரம் என்பது பொதுவாக பிரார்த்தனை வாசகங்கள் எனலாம். அவற்றின் உரையாகவும், வேள்விகளின் செய்முறைக் குறிப்புகளாகவும் புகழ்ந்துரைகளாகவும், அதற்கான கதைகளாகவும் உள்ளவை பிராம்ஹணங்கள். ஆரண்யகம் என்ருல் காடுகளில் – தனிமையான இடங்களில் – ஓதப்பட்டுச் சிந்தனைசெய்யப்பட வேண்டியவை என்று பொருள். ஞானகாண்டம் எனப்படும் உபநிஷத் அந்தப் பகுதியில் தான் இருக்கிறது.

செய்யா மொழி :

ஊழிக்காலத்தில் பரம்பொருளான சிவபெருமானிடம் உலகம் லயத்தை அடையும்போது வேதமும் சூக்ஷ்ம ரூபமாக ஆகி மறைகிறது. மறுபடியும் சிருஷ்டி துவங்கும்போது சிவ பெருமான் பிரம்ம தேவரைத் தோற்றுவிக்கிருர். மறைந்த வேத ஒலிகளை அவரது மனத்திலே தோன்றவைத்து அவர் வாயிலாக வேதம் வெளிவந்து பரவ வழி செய்கிருர். பிரம்ஹதேவன் வேதம் கூறிய வழியில் உலகைப் படைக்கிருர்.

காதினுள் உள்ள ஆகாயத்தையும் வெளியே உள்ள விரிந்த ஆகாயத்தையும் ஒன்ருக ஆழ்ந்து தியானம்செய்வதால் ஆகாயத்தில் உள்ள சூட்சும ஒலிகளையும் வெகுதூரத்திலிருந்து கூட கேட்கும் ஆற்றல் ஏற்படுகிறது என்று பதஞ்சலி முனிவர் இயற்றிய யோக சூத்திரம் சொல்லுகிறது.

அந்தமுறையில்செய்த தவத்தின் வலிமையால் முனிவர்கள் பிரம்ம தேவனிடமிருந்து வெளியான வேதஒலியைக் கண்டறிந்து வெளியிடுகிருர்கள். வேதங்களில் உள்ள கருத்து, மொழி, சொல்லமைப்பு எதிலும் முனிவர்களின் செயற்பாடு கொஞ்சமும் இல்லை. ரிஷி என்ற சொல்லுக்குப் பார்ப்பவர் என்பது தான் பொருள்.

உலகமும் திரும்பத்திரும்ப உண்டாகிமறைகிறது. வேதமும் அவ்விதமே உண்டாகி மறைகிறது. இரண்டும் அனுதி. ஆகையால், வேதத்தில் உலகியல் பொருள்களைப் பற்றி சொல்லியிருப்பதால் உலகம் உண்டானபிறகே வேதம் உண்டாயிற்று என்று சொல்லுவதற்கில்லை.

இவ்விதம் யாராலும்செய்யப்படாததால் அதற்குச் செய்யா மொழி என்றும், மறைந்திருந்து தோன்றுவதால் மறை என்றும் பெயர். எல்லையற்று விரிந்தது என்றபொருளில்வந்த "பிரம்ஹ" என்ற சொல்லும் வேதத்தைக் குறிக்கும். வேதம் ஓதுவார் பிராம்ஹணர். வேதம் கற்கும் மாணவன் பிரம்ஹசாரி. அவனது ஒழுக்கம் பிரம்ஹசரியம்.

வேதமந்திரத்தைச் சொல்லும்போது அதைக் கண்டறிந்த ரிஷியையும், அது அமைந்துள்ள சந்தத்தையும், அதனுல் போற்றப்பெறும் தேவதையையும் அறிந்தே சொல்லவேண்டும். ஒவ்வொரு மந்திரத்துக்கும் யார் ரிஷி என்பதற்கு ஆதாரநூல் இருக்கிறது.

வேதத்தின் ஆறு அங்கங்கள் :

வேதத்தின் உச்சரிப்பு பிழைபடாமல் இருக்கவும், பாடபேதங்கள் ஏற்படாதிருக்கவும், பொருள் அறிந்து சொல்லப்படுவதற்காகவும் வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள வேள்விகள் சரியான முறையில் செய்யப்படவேண்டியதற்காகவும் வேதத்தின் ஆறு அங்கங்கள் எனப்படும் ஆறுவகை நூல்களை மஹரிஷிகள் இயற்றியுள்ளார்கள். மனிதன் நன்ருகச் செயல்பட உறுப்புகள் தேவையாக இருப்பதுபோல் இந்த ஆறு அங்கங்களும் வேதமாம் புருஷனுக்குத் தேவையாக இருக்கின்றன.

1. **சிக்ஷா :** (சிக்ஷா) — உச்சரிப்புமுறை இலக்கணம். (வேதத்தின் மூக்கு.)

வேதமந்திரங்களின் உச்சரிப்புக்குத் தனியான சக்தி கூறப்பட்டிருக்கிறது. சரியாக உச்சரிக்கப்படாவிட்டால் பலன் இல்லை என்பது மாத்திரம் இல்லை. விபரீத பலனும் உண்டு. ஸ்வரங்கள் மாறிவிட்டால் பொருளே மாறிவிடும். ஆகவே உச்சரிப்புமுறை மாருதிருக்க ஏற்பட்ட நூல் சிக்ஷா.

எழுத்துக்களின்பிறப்பு, அதற்காக நாபி முதல் உதட்டுநுனி வரை காற்றின் நடை (அகநடை, புறநடை), உறுப்புக்களின் அசைவு, உயிரெழுத்துக்களின் கால அளவு, ஸ்வரங்கள் இவை பற்றி சிக்ஷா விளக்குகிறது.

சிக்ஷா நூல்கள் ஒன்பது. வியாஸசிக்ஷா முதலியவை இவற்றுக்கு உதவி நூல்களாக உள்ள உப-சிக்ஷா நூல்கள் ஒன்பது யாக்ஞ்ய வல்கிய சிக்ஷா முதலியவை.

தாய்ப்புலி தனது குட்டியைக்கீழேவிழாமலும்,புண் ஏற்படாமலும் எவ்விதம் கவ்வித் தூக்குகிறதோ அதுபோல் எழுத்துக்களை அதிகமாக அழுத்தாமலும் தெளிவாகவும் உச்சரித்தல் வேண்டும் என்கிறது சிக்ஷா.

கட்டைத் தொண்டை உள்ளவர், மிகவும் நீளமான உதடுகளை உடையவர், உளறுவாயர், மூக்கறையர், நாக்குப்புறளாதவர் இவர்களைக் கொண்டு வேதமந்திரஜபம் செய்யப்படகூடாது என்கிறது சிக்ஷா.

2. வியாகரணம் : மொழி இலக்கணம் (வேதத்தின் வாய்)

எழுத்துக்களின் புணர்ச்சி, சொற்களின் சரியான உருவம், பகுதி -விகுதி அமைப்பு இவைகளையறிய வியாகரணம் தேவை, இந்திரன், பாணினி முதலிய எண்மர் இலக்கணத்தின் ஆதி நூலாசிரியர்களாக எண்ணப்படுகிறார்கள்.

3. (ச்) சந்தஸ் : யாப்பிலக்கணம். (வேதத்தின் கால்)

ஆசிரியர் உச்சரிக்கும் போது மாணவன் நேரில் பார்த்துச் சரியாக உச்சரிக்கப்பழகுவதுதான் முறை இவ்விதம் வேதம் காதால் கேட்கப்பட்டுப் பரம்பரையாக வந்ததால் அதற்கு, சுருதி என்று பெயர். சுருதி என்றால் காது. எழுதாக்கிளவியாம் வேதத்தை எழுதி வாசிப்பது வழக்கமில்லை. எழுதியதைப் பார்த்து வாசிப்பவனை "லிகித பாடகன்" என்று சொல்லிக் குறைவாகக் கூறுகிறது சிக்ஷா. ஆகவே கேட்டு மனப்பாடம் செய்ய வேண்டிய வேதம் அதற்கேற்றவாறு பெரும்பாலும் செய்யுளாகவே அமைந்துள்ளது. செய்யுளின் அடிகள் அவற்றிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை இவைகள் காரணமாகப் பலவகைப்படும் வேதச் சந்தங்களை விளக்கும் முறையில் அமைந்துள்ளன "சந்தஸ்" நூல்கள். பிங்களர், காத்யாயனர் போன்ற முனிவர்கள் இவற்றை எழுதியிருக்கிறார்கள்.

வேத மந்திரத்தைத் தனக்குள் அடக்கிக் கொள்வதால் சந்தஸ் வேதத்திற்கு - நகைக்கு பெட்டகம் போல், அரிசிக்கு உமிபோல் - காப்பாக அமைந்திருக்கிறது. வேத அங்கங்களில் இது பிரதானமாதலால் வேதத்திற்கே சந்தஸ் என்ற பெயர் ஏற்பட்டு விட்டது.

4. நிருக்தம் : அரும்பதவுரை (வேதத்தின் காது.)

மற்ற இலக்கியங்களிலிருந்து மாறுபட்ட பொருளிலும் பல சொற்கள் வேதத்தில்காணப்படுகின்றன. அவைகளின்சரியான பொருளை அறிவிப்பதற்காக யாஸ்கர், காலவர் முதலான பல முனிவர்கள் நிருக்த நூல்களை இயற்றி இருக்கிறார்கள். அவைகளில் தற்போது யாஸ்கரது நிருக்தம் ஒன்றே கிடைக்கிறது.

5. ஜ்யோதிஷம் : ஜ்யோதிஸ் எனப்படும் நக்ஷத்திர–கிரகங்களைப்பற்றிய நூல் (வேதத்தின் கண்.)

வேதங்களில் கூறப்பட்டுள்ள வேள்விகள் முதலான கர்மங்களைச் செய்ய திதி–வார நக்ஷத்திரங்களை அறிதல் மிகவும் அவசியமாகிறது. ஆகவே முனிவர்கள் ஜோதிட கணித விஞ்ஞான நூல்களை இயற்றினார்கள். ஜோதிட சித்தாந்த ஸ்கந்தம் (astronomy) எனப்படும் வகையைச் சேர்ந்த இந்த நூல்களில் தற்போது உள்ள உயர்தர கணக்கு வகைகள் எல்லாம் இருக்கின்றன.

பலகோடி மைல்களுக்கு அப்பால் உள்ள நக்ஷத்திரக்களின் அமைப்பு, ராசி சக்கிரம், அதில் சஞ்சாரம் செய்யும்கிரகங்களின் பல்வேறு வகைப்பட்ட வேகம் இவற்றை யெல்லாம் செயற்கையான சாதனம் ஏதுமின்றி அறிந்து கிரஹணம் போன்ற நிகழ்ச்சிகளைத் துல்லியமாக முன் கூட்டியே நிர்ணயம் செய்து சொன்ன நமது முன்னோர்களான முனிவர்களின் தவவலிமை தான் என்னே! அனாதியான வேத ஒலிகளை மாறுபாடின்றி அவர்கள் கண்டறிந்ததில் சந்தேஹப் படுவதற்கு என்ன இருக்கிறது?

ஜைமினி முனிவர் இயற்றிய ஜோதிட சூத்திரம் பிரசித்தமானது. இதைத் தவிர வஸிஷ்டர், அத்திரி போன்ற பதினெண்மர் ஜோதிடக்கலை வல்லுனராகக் கூறப்படுகிறார்கள்.

6. கல்பம் : கல்பம் – வேள்விகளுக்கான செய்முறை நூல் (வேதத்தின் கை.)

வேதத்தின் பிராம்ஹணம் என்ற பகுதியில் செய்முறைக் குறிப்பு இருப்பதாக முன்பு சொன்னோம். அதன் விரிவே கல்ப ஸூத்ரம். சுருதி (வேதம்)விதித்தவேள்விகளின் செய்முறையை விளக்கும் கல்பம் சிரௌத கல்பம்.

கிருஹம் என்றால் வீடு. வீட்டில் செய்யப்படும் பல்வேறு சடங்குகளை ஸ்மிருதிகள் கூறுகின்றன. அவற்றின் விதிமுறையைச் சொல்லும் கல்பம், கிருஹ்ய கல்பம்.

ஆபஸ்தம்பர் முதலான முனிவர்கள் ஒவ்வொரு சாகைக்கும் தனித்தனியே கல்ப ஸூத்திரங்களை எழுதியிருக்கிறார்கள்.

இதைத்தவிர வேள்விகளுக்கான யாகசாலை அமைப்பு, ஹோம குண்டங்களின் அமைப்பு இவைபற்றி க்ஷேத்திரகணித முறையில் விவரிக்கும் சுல்ப ஸூத்திரம் எனப்படும் நூலும் இந்த கல்பம் என்ற பிரிவிலேயே அடங்கும்.

சீக்ஷா முதலான இந்த ஆறு அங்கங்களுடன் கூடியவை ருக் முதலான நான்கு வேதங்கள். கற்ற வேத மந்திரங்களின் சக்தி குறையாமல் இருக்க Battery Charge செய்வது போல ஒவ்வொரு வருஷமும் ஆவணி அவிட்டம் எனப்படும் உபாகர்ம தினத்தன்று விசேஷ சடங்குகள் செய்யப்படுகின்றன.

இவ்விதம் நமது முன்னோர்களால் காப்பாற்றப்பட்டிருக்கும் வேதமே நமது மதத்தின் மூலப்பிரமாண நூலாகும்.

வினாக்கள்

1. வேதத்தின் பகுதிகள் யாவை? அவை எந்த அடிப்படையில் உண்டாயின?
2. சாகை என்றால் என்ன? சாகையின் உட்பிரிவுகள் யாவை?
3. வேதத்தின் ஆறு அங்கங்கள் எவை? அவை உணர்த்தும் பொருள்கள் யாவை?
4. வேதத்தின் மறுபெயர்களைப் பெயர்க்காரணங்களுடன் எழுதுக.
5. வேதத்தின் மெய்ப்பொருள் என்ன?
6. குறிப்பு வரைக:–

   கருமகாண்டம், வேதவியாசர், தைத்திரீயசாகை, சுக்லயஜுர் வேதம்.

கட்டுரை வழங்கியவர்: "வித்யாவாசஸ்பதி"

திரு. P. ராமதாஸ் ஐயர்.